# இசை வாழ்வில் எழுபதாண்டுகள்...





சங்கீதபூஷணம்
திரு. ச. பாலசிங்கம்

# இசை வாழ்வில் எழுபதாண்டுகள் . . .



## சங்கீதபூஷணம்
## திரு. ச. பாலசிங்கம்

20.11.2011 ஞாயிற்றுக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில்
மாணவர்களால் நடாத்தப்பெற்ற பாராட்டுவிழாவின்போது
வெளியிடப்பெற்ற சிறப்பு மலர்



# அருளாசிச்செய்தி

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்.

**கலா ரசிகப் பெருமக்களுக்கு!**

சங்கீத பூஷணம் திரு. பாலசிங்கம் இன்று இசைவாழ்வில் 70 வது ஆண்டை அடைந்திருப்பதை இட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். சங்கீத வித்துவான்களில் தனித்துவமான மனநிலையும், குணங்களையும் கொண்ட திரு. ச. பாலசிங்கம் தானும் வாழ்ந்து மற்றவரும் வாழ வேண்டும் என்ற மனநிலையைக் கொண்டவர். இசையினால் அனைவரையும் இணைய வைத்து இசையவைக்கின்ற செயற்பாட்டை முன்னிறுத்திய பெருமைக் குரியவர். தமிழிசையை அனைவரும் கற்க வேண்டும், என்னும் வகையில் அண்ணாமலை இசைத்தமிழ்மன்றம் என்னும் இசைக்கல்லூரியை செயற் படுத்தி இதனூடாக பல இசை விற்பன்னர்களை உருவாக்கிய பெருமைக் குரியவர்.

சீரான உடை, நேரான பேச்சு, எடுத்த விடயத்தை செவ்வனையே ஆற்றும் செயற்றிறன் அனைத்தும் கொண்ட திரு. ச. பாலசிங்கம் என்னுடைய இசைக்குருவும் ஆவார். எனது பாடசாலை தொடக்கம் ஆதீன வாழ்க்கை வரை எனது வாழ்வில் மிகவும் அக்கறையுடைய குருவாக விளங்குகிறார். இவருடைய பணிகள் பல இதனால் இன்று பிள்ளைகளும் கலாரசிகர்களும், சீடர்களும் இணைந்து விழா எடுத்து சிறப்பு செய்வது அனைவருக்கும் மகிழ்வை தருகின்றது. இன்று போல் என்றும் மகிழ்ச்சியாக வாழ சங்கீத பூஷணம் திரு. ச. பாலசிங்கம் தம்பதியினரை வாழ்த்தி பாராட்டுகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"



# ஆசிச்செய்தி


அருட்திரு நி. மரியசேவியர் அடிகள்,
இயக்குநர்,
திருமறைக் கலாமன்றம்.

கலைத்திறனென்பது கடவுளால் கொடுக்கப்படும் கொடையாகும். அத்திறனை இனங்கண்டு வளர்த்து அதனால் தன்னையும் பண்படுத்தி தான்வாழும் சமூகத்தையும் பண்படுத்துபவனே கலைஞனாவான். அதிலும், குறிப்பாக இசைக்கலை என்பது தெய்வீகமானது. இறைவனையும் மயங்க வைப்பது. அந்த இசைக்கலையை கைவரப்பெற்று அக்கலையால் தம்மைப் பண்படுத்தி "மனிதத்துவத்திற்கு" எடுத்துக்காட்டாக வாழ்வாங்கு வாழ்ப வர்கள் மிக மிகச்சிலரே. அச்சிலரில் ஒருவரே சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கமாவார்.

தனது பதின்மூன்று வயதிலேயே கலைப்பயணத்தில் காலடி எடுத்து வைத்தவர். இசைநாடகக் கலைஞரான தந்தையார் சபாபதிப்பிள்ளை யிடமிருந்து குரலிசையையும் ஹார்மோனிய விரலிசையையும், கற்றுக் கொண்டவர். படிப்படியாக தன்னை வளர்த்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தனது உயர்கல்வியை கற்றுத்தேர்ந்து சங்கீதபூஷணமாக வெளிவந்தவர். எம். எம். தண்டபாணி தேசிகர், ரி. கே. ரங்காச்சாரியார், ரி. என் சிவசுப்பிரமணியம் போன்ற மேதைகளால் புடமிடப்பட்டு சிறந்த இசை ஆற்றுகையாளனாக மிளிர்ந்தவர். தான் கற்ற கலையை பாடசாலைகளிலும் பல்கலைக்கழகத்திலும், மாணவர்களுக்கு வழங்கி இசைக்கலைஞர் பலரை உருவாக்கியவர். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தில் இசையை வாழச் செய்தவர்.

இவரது சிறப்பிற்கு மற்றொரு முக்கிய காரணம் தமிழிசையை முதன்மைப்படுத்தி, இசை அரங்குகளில் அதற்குரிய கௌரவத்தினை தோற்றுவித்தமையாகும். இசைகற்றோர், தமிழிசையை அரங்கில் நிகழ்த்துதல் கௌரவக்குறைச்சல என எண்ணிய காலத்திலேயே தமிழிசை யால், தமிழுக்கு பெருமை தேடித்தந்தவர். எல்லாவற்றுக்கும் மேலாக தூய

மனம் படைத்தவர். பழகுவதில் குழந்தையையொத்த பண்பாளன். கலைச்செருக்கற்று பணிவை அணிந்து கொண்ட நல்ல மனிதன். இவரை தொண்ணூறுகளில் எமக்கு அறிமுகப்படுத்தியவர், இவரது மாணவனும் எமது இசை ஆசிரியருமான திரு. நாகராஜா அவர்கள். அவரின் அற்புதமான இசை ஆற்றலை இனம் கண்ட நாம் எமது திருமறைக்கலாமன்றம் நடத்திய இசைவிழாக்களில் அவரின் தமிழிசை ஆற்றுகையை அரங்கேற்றி சுவைத்தோம், எமது அரங்கிலே கௌரவித்தோம். இன்று அவரது எண்பத்திமூன்றாவது வயதில் அவரது மாணவர்களும், இசைஆர்வலர்களும் சேர்ந்து விழாவெடுப்பதனை அறிந்து பெருமகிழ்வடைகின்றோம். எழுபது வருடங்கள் கலைக்காக தன்னை கரைத்துக் கொண்ட பாலசிங்கமவர்களுக்கு இறைவன் நல்லாரோக்கியத்தையும் மன அமைதியையும் அளிக்க வேண்டும் என்று ஆசித்தி வாழ்த்தி நிற்கின்றேன்.





பிரதம அதிதி, பேராசிரியர், கலாநிதி

## திரு. சு. மோகனதாஸ் அவர்களின் வாழ்த்துச்செய்தி

முன்னாள் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர்,
பல்கலைக்கழகங்களின் மானிய
ஆணைக்குழு அங்கத்தவர்.

தென்இந்தியாவில் கர்நாடக சங்கீதத்தை பயின்று இலங்கைத் தீவில், சிறப்பாக யாழ்ப்பாணத்தில் அக்கலையின் வளர்ச்சிக்கு அயராது பாடுபடுகின்ற சங்கீதபூஷணம் திரு. சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் அவர்களை பாராட்டி நடைபெறும் விழாவுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திரு. ச. பாலசிங்கம் அவர்களின் தந்தை சபாபதிப்பிள்ளை அவர்கள் அரியாலையூரில் பல இசை நாடகங்களை பயிற்றுவித்து மேடையேற்றிய அக்காலத்தை நினைத்துப்பார்க்கின்றேன். அந்நாடகங்கள் பலரின் பாராட்டைப்பெற்று வெற்றி நாடகங்களாக பல பாகங்களிலும் அரங்கேற்றப்பட்டமையை நான் அறிவேன். இவ்வாறான இசைநாடகங்களை பயிற்சிப்பட்டறையிலேயே கேட்டு, பார்த்து, கிரகித்து பயிற்சி பெறக்கூடிய வாய்ப்பை விழாநாயகர் வீட்டிலேயே பெறக்கூடிய பெரும்பாக்கியத்தை பெற்றதாலும், இயற்கையாகவே அவருக்கு இருந்த இசை ஞானத்தாலும், எல்லாம் வல்ல இறைவனின் அருட்கொடையாலும் அவரின் நாவில் இசை வாணி நர்த்தனம் புரிகின்றாள்.

எனது பேரனார் அர்ச்சுனன் தம்பிப்பிள்ளை அவர்களும் ஓர் இசைக்கலைநாடக நடிகர். பல இசை நாடகங்களில் நடித்துள்ளார். இதனால் அவருக்கும் சபாபதிப்பிள்ளை அவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட இசைக்கலை உறவு குடும்ப உறவாக தலைமுறை தலைமுறையாக தொடர்வதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இச்சந்தர்ப்பதில் அதை நினைவு கூறுகின்றேன்.

இலங்கேஸ்வரனின் இசையில் ஆடவல்லார் சிவபெருமானே மகிழ்ந்தார். அவ்வாறான மகிழ்ச்சி மக்களின் மன அமைதியையும்

பண்பாட்டு பண்புகளையும் வளர்க்கும் கருவியாகும். அந்த கருவியை சரியான முறையில் பயன்படுத்தி பலரின் மன அமைதிக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் உழைக்கின்ற பெருமகனாருக்கு விழா எடுப்பது மிகவும் பொருத்தமான காரியமாகும். அதற்காக உழைத்த அன்பர்களுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பல அமைப்பு ரீதியான நிறுவனங்கள் மூலமும் இறைதொண்டின் மூலமும் இலவசமாக இத்தெய்வீக கலையை இவர் பயிற்றுவித்ததை நான் அறிவேன். பல இசை அரங்குகளில் தனது குரல் வளத்தினாலும் கர்நாடக இசைஞான நுணுக்கங்களை கற்றறிந்த பயிற்சியாலும் பல்லாயிரக் கணக்கான இரசிகப்பெருமக்களை கவர்ந்தார். அண்ணாவியார் குடும்பத்தைச் சேர்ந்த சங்கீதபூஷணம் பாலசிங்கம் அவர்களை நான் தனிப்பட்ட முறையிலும் அறிவேன். சிறந்த ஒழுக்கப்பண்புகளும் கர்நாடக இசை துறைவளர்ச்சிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து அளப்பரிய சேவைகளை ஆற்றுகின்ற விழாநாயகர் நீடுழிகாலம் நல்ல வாழ்வு வாழ வேண்டும் என்று இறைவனை வேண்டிக்கொள்கின்றேன்.

*"வாழ்க அவரின் கர்நாடக சங்கீதப்பணிகள்"*





1959ஆம் ஆண்டு இசையரங்கேற்றம்
அரசாங்க அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா தலைமையில்,
யாழ் மாநகரசபை மண்டபத்தில்.
வயலின் – வித்துவான் திரு. S. சோமாஸ்கந்தசர்மா.
மிருதங்கம் – சங்கீதபூஷணம் திரு. A.S. இராமநாதன்
கடம் – வித்துவான் திரு. P.S. ஆறுமுகம்பிள்ளை
கெஞ்சிரா – வித்துவான் வண்ணை திரு. K. கணேசபிள்ளை.

சங்கீத பூஷணம்

# திரு. ச.பாலசிங்கம் அவர்களின் இசையும் வாழ்வும்



ஒரு கலைஞனுக்கு கலைச்செயற்பாடுகளும் ஆற்றுகைத்திறனும் எவ்வளவு முக்கியமோ, அதே போன்று கலைப்பண்புகளும் முக்கியமானதாகும். பொறுமை, அன்பு, தன்னடக்கம், தட்டிக்கொடுத்தல், தனக்குத் தெரிந்ததை மற்றோருக்குச் சொல்லிக்கொடுத்தல் போன்றவை பல கலைப்பண்புகளுள் அடங்கும். இத்தகு கலைப்பண்புகளைத் தன்னகத்தே கொண்டமைந்திருக்கும் ஒரு கலைஞனே என்றும் எல்லோரது மனங்களிலும் நிலைத்து நிற்கும் உன்னத நிலையில் வாழ்வார். அத்தகு கலைப்பண்புகள் அனைத்தையும் நிறையப் பெற்றவர். சங்கீத பூஷணம் திரு. ச. பாலசிங்கம் அவர்கள் உலகமெல்லாம் பரந்து புகழ்பரப்பிக் கொண்டிருக்கும் பெரியதொரு மாணவப் பரம்பரைக்குச் சொந்தக்காரர் அவர்.

### *இசைவாழ்வுக்கு உறுதுணையான குடும்பப் பின்னணி*

சங்கீத பூஷணம் திரு. ச. பாலசிங்கம் அவர்கள், சபாபதிப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை தம்பதியினருக்கு ஆறாவது புத்திரனாக 15.09.1529 ஆம் ஆண்டு அரியாலையில் பிறந்தார். தந்தையாரான பெரியதம்பி சபாபதிப்பிள்ளை அவர்கள் ஆயிரத்துத்தொளாயிரத்து இருபதுகள் தொடக்கம் அறுபதுகள் வரை பிரபலமான அண்ணாவியாராகத் திகழ்ந்தவர். அவரது தந்தையாரான பெரியதம்பி அவர்களும் நாடகத்துறையில் மிகுந்த ஈடுபாடு உள்ளவராய் இருந்தார். இவ்வாறு கலைத்துறை ஆர்வம் நிறைந்த குடும்பத்தில் உதித்த அண்ணாவியார் சபாபதிப்பிள்ளை அவர்கள் பல சிறந்த நாடகங்களை நெறிப்படுத்தி அரியாலையிலும், யாழ் குடாநாட்டின் பல பகுதிகளிலும் மேடையேற்றி இரசிகர்களின் பாராட்டைப் பெற்றவர். அவர் மேடையேற்றிப் புகழ்பெற்ற நாடகங்களில் சதி அனுசூயா, பவளக்கொடி, கிருஷ்ணன்தூது, தூக்குத்தூக்கி, நளன்தமயந்தி, மனோகரா, பனையரசன், இளங்குமரன், காத்தவராயன், யயாதி, பதிபக்தி, அபிமன்யு, பூதத்தம்பி போன்றவை குறிப்பிடத் தக்கவை. திரு. சபாபதிப்பிள்ளை அவர்கள் நாடகத்துறையுடன் இசைத் துறையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். வயலின், ஹார்மோனியம் போன்ற வாத்தியங்களை வாசிப்பதிலும் சிறந்து விளங்கினார். பல மாணவர்களுக்கு வாய்ப்பாட்டு வகுப்பினை நடாத்தி வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தினார். அவரிடம்

இசைபயின்ற மாணவர்கள் இன்றும் அவரது கலைத்திறனைப் பற்றி கூறிக்கொண்டு இருப்பதை நாம் கேட்கக் கூடியதாயுள்ளது. அரியாலையில் மட்டுமன்றி வட்டுக்கோட்டை, உரும்பிராய், நெல்லியடி, மானிப்பாய், போன்ற இடங் களுக்கும், கால் நடையாகச் சென்று வகுப்புக்களை நடாத்தி, குடாநட்டின் இசை வளர்ச்சிக்குத் தன்னாலான பங்களிப்பினை ஆற்றியவர். அக்காலத்தில் அரியாலையூரின் நாடகவளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர் என்றால் அது மிகையாகாது.

திரு. சபாபதிப்பிள்ளை அவர்களுக்கு ஐந்து ஆண்பிள்ளைகளும், மூன்று பெண்பிள்ளைகளுமாக எட்டுப் பிள்ளைச் செல்வங்கள் கிடைத்தன. மிகுந்த பொருளாதாரக் கஷ்டத்தின் மத்தியிலும் தனது பிள்ளைகளை அன்பாகவும் பண்பாகவும் வளர்த்தார். இசைப்பாரம்பரியத்தைக் கொண்ட அவரது பிள்ளைகளும் நல்ல சாரீர வளமும், இசைஞானமும் நிறைந்த வர்களாக விளங்கினார்கள். மூத்த மகனான துரையப்பா அவர்கள் மிகுந்த இசைஞானம் மிக்கவராக இருந்ததைக் கண்டு அவரை இந்தியாவிற்கு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வயலின் வாத்தியத்தினைக் கற்பதற்காக அனுப்பி வைத்தார். ஆயினும், "சங்கீதபூஷணம் " பட்டம் பெறுவதற்கு முன்று மாதகாலம் இருக்கையில் "கொலரா" என்னும் நோய் ஏற்பட்டு அங்கேயே இறைவனடி சேர்ந்து விட்டார். இந்நிகழ்வு அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியது. இன்னொரு மகனான நடேசர் அவர்கள் அரசாங்க லிகிதராகக் கடமை புரிந்தாலும் ஹார்மோனியம் வாசிப்பதில் வல்லவராகத் திகழ்ந்து தந்தையாரின் நாடகங்களுக்கு பக்கவாத்தியமாக ஹார்மோனியத்தை வாசித்து மெருகூட்டினார். அடுத்த மகனான கணேசர் அவர்கள் சிறுவயதில் தந்தையாரின் நாடகங்கள் பலவற்றில் பிரதான பாத்திரங்களை ஏற்று நடித்ததுடன் நகைச்சுவைப் பாத்திரங்களையும் ஏற்று திறம்பட நடித்து பலரதும் பாராட்டைப் பெற்றவர். பெண் பிள்ளைகளில் அம்பிகா, அம்பாலிகை இருவரும் முறையாக இசையைப்பயிலாவிடினும் நல்ல குரல் வளமும், இசைஞானமும் உள்ளவர்களாக விளங்கினார்கள். கடைசி மகளான இராதாதேவி அவர்கள் சிறுவயதில் இசையைப்பயின்று பின்பு பாடசாலையில் சங்கீதபூஷணம் திரு. த. இராசலிங்கம் அவர்களிடமும், தமையனாரான சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கம் அவர்களிடமும் பயின்றதுடன், தனது சொந்த முயற்சியுடனும் கற்று வடஇலங்கை சங்கீதசபைப் பரீட்சையில் ஆசிரியர் தரம் வரை சித்தி பெற்று "இசைக்கலாவித்தகர்" பட்டம் பெற்றதோடல்லாமல் பல தலைசிறந்த மாணவர் களை இசைத்துறையில் உருவாக்கியுள்ளார். இவர் அரசாங்கப் பாடசாலையில் இசையாசிரியராகக் கடமையாற்றியதுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் பாடகியாகத் தெரிவு செய்யப்பட்டு பல இசை நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார். அத்துடன் பல சங்கீத சபாக்கள், மன்றங்கள், கோவில்களிலும்

இசைக்கச்சேரி செய்துள்ளார். தனிப்பட்ட வகுப்புக்களை நடாத்துவதுடன், அக்காலத்தில் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்திலும், அரியாலையில் விசுவநாதன் இசைக்கல்லூரியிலும் இசையாசிரியராகக் கடமையாற்றியவர்.

### சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கம் அவர்களின் இசை வாழ்வு

அண்ணாவியார் திரு. சபாபதிப்பிள்ளை அவர்களது ஆறாவது புத்திரரான சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கம் அவர்களினது சிறுபராயம் முதலே இசையோடிணைந்த சூழல் அமையப் பெற்றிருந்தது. சின்னஞ் சிறு வயதிலேயே இசையிலும், நாடகத்திலும் ஆர்வங்கொண்டு பங்கேற்றுள்ளார். ஹார்மோனியம் வாசிப்பதில் மிகுந்த ஈடுபாடு கொண்டு தந்தையின் நாடகங்களுக்கும்,குடாநாட்டிலும், வெளிமாவட்டங்களிலும் உள்ள பாடசாலைகளில் நடைபெற்ற விழாக்களிலும் பக்கவாத்தியமாக ஹார்மோனியம் வாசித்து சிறுவயதிலேயே பிரபலம் பெற்றார். ஆரம்பத்தில் தனது தந்தையாரிடம் கர்நாடக இசையைப் பயின்ற இவர் 1952ஆம் ஆண்டு காலப் பகுதியில் இயங்கிய பிரபல பாடசாலையான பரமேஸ்வராக் கல்லூரியில், சங்கீதபூஷணம் திரு. ந. சண்முகரெத்தினம் அவர்களிடம் ஒருவருடம் இசையைப் பயின்றார். அத்துடன் அக்காலத்தில் தென்னிந்தியாவின் திருச்சி வானொலியில் ஒலிபரப்பப்பட்ட "இசைப்பயிற்சி " என்னும் நிகழ்ச்சியினைத் தவறாது கேட்டு அதனை ஹார்மோனியத்தில் வாசித்து பயிற்சி செய்து தனது சொந்த முயற்சியாலேயே இசையைக் கூடுதலாகக் கற்றேன் என்று பெருமையுடன் சொல்லிக்கொள்கிறார். நாடகத்துறையிலும் ஈடுபாடு கொண்ட இவர் தந்தையாரின் நாடகமான "நளன்தமயந்தி" என்ற நாடகத்தில் தமயந்தியாக நடித்து அரியாலை மக்களின் பாராட்டைப் பெற்றார். அத்துடன் அமுதவல்லி (மந்திரிகுமாரி) உண்மையின் வெற்றி (அரக்குமாளிகை), மனோன்மணி போன்ற நாடகங்களிலும் பங்கேற்று நடித்து தனது நடிப்புத்திறனை வெளிப்படுத்தினார். இந்நிகழ்வுகள் 1949, 1950, 1951 ஆம் ஆண்டுகளில் இடம் பெற்றன.

சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கம் அவர்கள் தமது பாடசாலைக் கல்வியை, யாழ் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம், அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, கனகரெத்தினம் மகாவித்தியாலயம், யாழ், பரமேஸ்வராக்கல்லூரி ஆகியவற்றில் பெற்றுக்கொண்டார்.

இசைஞானமும், குரல்வளமும், ஊக்கமும் மிக்க இவரை இந்தியாவுக்கு அனுப்பிப் படிப்பிக்க வேண்டும் என்று சகோதரர்கள் விரும்பிய போதிலும் தனது மூத்த மகன் 1945ஆம் ஆண்டு கல்வி கற்கப் போன இடத்தில் இந்தியாவில் காலமான காரணத்தால் இவரை அங்கு அனுப்புவதற்கு தந்தையார்

விரும்பவில்லை. சிறிது காலம் செல்ல மீண்டும் சகோதர சகோதரிகளின் விருப்பத்தினாலும், வற்புறுத்தலினாலும் 1955ஆம் ஆண்டு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழத்தில் இசை கற்பதற்காக அனுப்பி வைக்கப் பட்டார். அங்கு நான்கு வருடங்கள் மிகச் சிறந்த முறையில் இசைபயின்று "சங்கீதபூஷணம்" பட்டம் பெற்றார். இவர் தமிழிசையை வளர்க்க வேண்டும் என்ற கொள்கையில் வாழ்ந்து தமிழிசைக்கு உயிர் கொடுத்தவர் என்றால் அது மிகையன்று.

பட்டம் பெற்று 1959ஆம் ஆண்டு இலங்கை திரும்பினார். அண்ணா - மலைப் பல்கலைக்கழகத்தில் பயிலும் காலத்தில் இசையரசு M. M. தண்டபாணி தேசிகர், சங்கீதபூஷணம் T. K. ரங்காச்சாரியார், மன்னார்குடி, இராஜகோபால்பிள்ளை T.N. சிவசுப்பிரமணியம்பிள்ளை, மயிலம், P. வஜ்ரவேல் முதலியார், S. பார்த்தசாரதி ஆகியோரிடம் இசைபயின்று தனது இசையறிவை வளர்த்துக்கொண்டிருந்தார்.

**திருமண வாழ்வு:-**



1964 ஆம் ஆண்டு சித்திரைமாதம் 04 ஆம் திகதி நல்லூர் முருகன் கோவிலில் திருமணம் நடைபெற்றது. சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கம் அவர்கள் தமது மனதிற்குப் பிடித்த நல்லூரைச் சேர்ந்த நாகேஸ்வரி அவர்களை தமது இலட்சியப்போக்குக் கிணங்க பெற்றோரின் விருப்புடன் மணம் புரிந்து கொண்டனர். எளிமை, வரதட்சனை வாங்காமை, தமிழ் மொழிப்பற்று என்பன அவர்களது உயரிய பண்புகளாகும். திருமணம் நிகழ்ந்த நாள் முதல் இன்று வரை தமது இசைத்துறைசார் வளர்ச்சி, மனம் நிறைந்த வாழ்வின் முன்னேற்றத்துக்கு தமது துணைவியாரே முழுக்காரணம் என்று மகிழ்வுடன் தமது மாணவர்களுடன் அடிக்கடி அளவளாவிக்கொள்வார். மனமொத்த மணவாழ்வில் மூன்று பிள்ளைச் செல்வங்கள் கிடைத்தன.

சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கம் அவர்களின் வழியில் அவரது மூன்று பெண்பிள்ளைகளும் கலைத்துறையில் ஈடுபாடு கொண்டவர்கள். மூத்த மகள் கல்யாணி சுதர்சன் ஒரு பிரபலமான வீணைக்கலைஞர். இவர் ஒரு யாழ் பல்கலைக்கழக இசைத்துறைப்பட்டதாரி ஆவார். யாழ் பல்கலைக்கழகத்தில் தனது கற்கை நெறி முடிவுற்றதும் 3 வருடங்கள் யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறையில் உதவி விரிவுரையாளராகக் கடமைபுரிந்தார். தற்போது

கனடா மண்ணில் "ஏழிசை மதுர கான சபா" என்னும் மன்றத்தை இயக்கி அதன் மூலம் நிறைய மாணவர்களுக்கு வீணை, வாய்ப்பாட்டு என்பவற்றைக் கற்பித்து வருகின்றார். அத்துடன் இசையரங்குகள், நடன அரங்குகள் என்பவற்றிற்கு வீணைவாத்திய ஆற்றுகைக் கலைஞராகப் புகழ்பரப்பி வருகின்றார். அடுத்த மகள் அமிர்தவர்ஷினி உதயகரன் நோர்வே மண்ணில் வசித்து வருகிறார். இவர் ஒரு நடனக்கலைஞர். மூன்றாவது மகள் பாலினி கண்ணதாசன் ஒரு நடனக்கலைஞர் ஆவார். இவர் யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் ஆசிரியையாகப் பணிபுரிகிறார். மருமகன் க. கண்ணதாசன் நாடறிந்த மிருதங்கக் கலைஞர்.

சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கம் அவர்களிடம் இசைபயின்று அத்துறையில் சாதித்து வருபவர்களில் சங்கீதவித்துவான் திருமதி. குணபூஷணம் நாகராசா(நோர்வே), சங்கீத கலாவித்தகர் திரு. சி. நாகராசா (யாழ்ப்பாணம்), இசைக்கலாவித்தகர் திருமதி. நவமணி பத்மநாதன் (கொழும்பு), இசைக்கலைமணி செல்வி. கிருஷ்ணவேணி மயில்வானம் (யாழ்ப்பாணம்), இசைக்கலைமணி திருமதி. கலாராணி ஸ்ரீஸ்கந்தராசா (கொழும்பு), இசைக்கலைமணி திருமதி. சக்திதேவி சிவகுமார் (யாழ்ப்பாணம்), சங்கீத கலாவித்தகர் திருமதி. மகேஸ்வரி சுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்), சங்கீதவித்துவான் திரு. S. தில்லைமணி (யாழ்ப்பாணம்), சங்கீத வித்துவான் திரு. M. யோகேஸ்வரன் (லண்டன்), சங்கீத வித்துவான் திரு. Y. யாதவன் (லண்டன்), இசைக்கலைமணி திருமதி. மு. உதயராணி (முல்லைத்தீவு), இசைக்கலைமணி திருமதி. சாந்தகுமாரி கமலகாந்தன் (முல்லைத்தீவு), ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக மறைந்த புகழ்பூத்த இசைமேதை சங்கீதபூஷணம் திரு. L. திலகநாயகம் போல் அவர்களும் திரு. ச. பாலசிங்கம் அவர்களின் முதன்மை மாணவர்களில் ஒருவர் ஆவார்.

இவரது இசைத் தொண்டினைப் பாராட்டுமுகமாக யாழ் திருமறைக் கலாமன்றம் 1993ஆம் ஆண்டு இவரைக் கௌரவித்தது. 2003ஆம் ஆண்டு கனடா சென்ற போது இவரைக் கௌரவிக்கும் முகமாக கனடா இளங்கலைஞர் மன்றத்தினர் பாராட்டு விழா எடுத்து "கானசொரூபி" என்ற பட்டமளித்து பொற்கிழி, தங்கப்பதக்கம் அளித்து பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். அன்று அங்கு இவர் நிகழ்த்திய தமிழிசைக் கச்சேரியைக் கேட்டவர்கள் வயது மூப்படைந்து விட்ட போதிலும் குரல் மட்டும் இளமையுடன் கணீரென ஒலிக்கிறது எனப்பாராட்டிப் பேசினார்கள். பின்பு கனடா வாழ் அரியாலையூர் மக்களும் மதிப்பளித்து விருது வழங்கி மகிழ்ந்தனர். அத்துடன் கனடா தமிழிசைச் சங்கத்தினரும் பாராட்டி மதிப்பளித்தனர்.

## ஆரம்பகால அரங்கேற்றப்பதிவும், அதைத்தொடர்ந்த இசைப்பணியும்

"சங்கீதபூஷணம்" பட்டம் பெற்று இலங்கை வந்ததும் அரியாலை ஊர்மக்கள் அனைவரதும் விருப்பத்தின்பேரில் மக்களின் ஆதரவுடன் 1959ஆம் ஆண்டு புரட்டாதிமாதம் 2ஆம் திகதி யாழ் நகரசபை மண்டபத்தில் அந்நேர மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களின் தலைமையில் மிகவும் சிறப்பாக இசையரங்கேற்றம் நடாத்தப்பட்டது. அரங்கேற்ற நிகழ்வுக்கு பக்கவாத்தியக்கலைஞர்களாக வயலின் வித்துவான் S. சோமாஸ்கந்தசர்மா அவர்களும், மிருதங்கம் சங்கீதபூஷணம் திரு. A. S. இராமநாதன் அவர்களும், கடம் வித்துவான் P. S. ஆறுமுகம் பிள்ளை அவர்களும், கெஞ்சிரா வித்துவான் வண்ணை K. கணேசபிள்ளை ஆகியோர் பங்கேற்றனர்.

அரங்கேற்றம் நடைபெற்று ஒரு வாரம் சென்றதும் யாழ் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் இசையாசிரியராக நியமனம் கிடைத்து பணியாற்றத் தொடங்கினார். அரங்கேற்றத்திற்கு வருகை தந்திருந்த அமரர் சங்கீதபூஷணம் திரு. ஆ. நமசிவாயம் அவர்கள் தன்னால் ஆரம்பிக்கப்பட்டு நடாத்திக்கொண்டிருக்கும் யாழ் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தில் இசையாசிரியராக கடமையாற்றும் படி கேட்டுக்கொண்டதற்கிணங்க அங்கு 1959ஆம் ஆண்டிலிருந்து 1995ஆம் ஆண்டு வரை தமிழிசையைக் கற்பித்து பல கலைஞர்களை உருவாக்கினார். "தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற உயரிய நோக்கோடு யாழ் அண்ணாமலை இசைத்தமிழ்மன்றம் நீண்ட காலமாக தரமான வகுப்புக்களை நடாத்தியும், பல புகழ்மிக்க இசைவிழாக்களை நடாத்தியும் இசைத்துறை வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி இருப்பது யாவரும் அறிந்ததே. இன்று ஈழத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் அண்ணாமலை இசைத்தமிழ்மன்றத்தில் இசை கற்று வெளியேறிய பல கலைஞர்கள் பேரும் புகழும் பெற்று தமது கலைத்துறைகளில் சாதித்து வருகின்றனர். திரு. S. பாலசிங்கம் அவர்கள் யாழ் அண்ணாமலை மன்றத்தில் இசையாசிரியராக மட்டுமன்றி பல ஆண்டுகளாக மன்றத்தின் செயலாளராகவும் செயற்பட்டு மன்றத்தின் வளர்ச்சி மற்றும் செயற்பாடுகள் அனைத்திலும் தம்மை முற்றுமுழுதாக ஈடுபட்டு உழைத்தார். அதன் பெறுபேறுகளை இன்றும் பேசப்பட்டு வரும் அம்மன்றத்தின் செயற்பாட்டுத்திறன் மூலமும் இன்று விரிவுரையாளர்களாக, இசைத்துறை உதவிக்கல்விப் பணிப் பாளர்களாக உலகம் போற்றும் கலைஞர்களாக உள்ள அம்மன்றத்தின் பழைய மாணவர்களினாலும் அறிய முடிகின்றது.

திரு. ச. பாலசிங்கம் அவர்கள் தமது சொந்த ஊரான அரியாலையிலும் இசையினை வளர்க்க வேண்டும் என்ற ஆவலில் அரியாலை சித்தி விநாயகர்


ஆலயச்சூழலில் அமரர் விசுவநாதன் இசைக்கல்லூரியினை ஆரம்பித்து இசை வகுப்புக்களை நடாத்தி அங்கும் பல மாணவர்களை உருவாக்கினார். அத்துடன் தனிப்பட்ட வகுப்புக்களையும் நடாத்தி தமிழிசை வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டார். தமிழிசை விழாக்களை வருடாவருடம் நடாத்துவதுடன் மாதாந்த இசை நிகழ்ச்சிகளையும் நடாத்தி மாணவர்களின் வளர்ச்சியை மேம்படுத்தினார். ஆசிரியர் தொழிலை மேற்கொண்டதுடன் யாழ்குடா நாட்டிலுள்ள இசை மன்றங்கள், கோவில்கள், திருமணவிழாக்கள் போன்றவற்றிலும் தமிழிசைக் கச்சேரிகளை நடாத்தி அனைவரது பாராட்டையும் பெற்றார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி கூட்டுத்தாபனம் என்பவற்றில் அதிவிசேட பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டு இசைக்கச்சேரிகள், பண்ணிசைக் கச்சேரிகள் ஆகியவற்றை நடாத்தி பிரபலம் பெற்றார்.

**இசையோடு இணைந்த வன்னி வாழ்வில்**



இவரது இசையோடிணைந்த வாழ்க்கையில் பாராட்டுக்களையோ, பட்டங்களையோ விரும்பாமல் தமிழிசை வளர்ச்சியில் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றார். 82 வயதை நிறைவு செய்துள்ள சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கம் அவர்கள் இன்றும் மேடையேறி இசைக்கச்சேரி செய்ய வேண்டும். மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்ற பெருவிருப்புடன் வாழ்ந்து கொண்டு இருக்கிறார். அத்துடன் கலைத்துறையில் பல சாதனைகளைப் படைத்து இன்றும் பேசப்பட்டு வரும் யாழ் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தை மீளவும் இயக்கி, கலைச்சேவை செய்ய வேண்டும் என்பது அவரது பெருங்கனவாகும்.





1959 இல் இந்தியாவில்

2000ஆம் ஆண்டில்







சங்கீதபூஷணம்

# திரு. எஸ். பத்மலிங்கம் அவர்களின் உள்ளத்திலிருந்து

சிங்கப்பூர் இந்திய நுண்கலைக்கழகம்,
சிங்கப்பூர்.

பெருமதிப்பிற்குரிய மூத்த கலைஞர் சங்கீதபூஷணம் எஸ். பாலசிங்கம் அவர்கள் தனது கலைச்சேவையின் எழுபதாண்டு கால நிறைவினை எய்தியிருப்பது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும். மரபு தவறாத, சம்பிரதாய சங்கீதத்தை தன் இனிய குரல்வளத்தின் துணைகொண்டு அள்ளி வழங்கி வருபவர் அவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அதியுயர் தரத்தில் (Super Grade) பாடும் வாய்ப்பாட்டுக் கலைஞர் பன்னிருவரில் அவரும் ஒருவர். தமிழிசைக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர்.

என் இளமைக்காலத்தில், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீதபூஷணம் பட்டம் பெற்று நாடு திரும்பிய எனக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தவர். 1970ஆம் ஆண்டு ஜூன் மாதம் எனது இசை அரங்கேற்றத்தை தானே முன்னின்று அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் சார்பில் நடாத்தியதோடு அம்மன்றத்திலேயே இசை ஆசிரியராகவும் நியமனம் தந்த பெருமகன் அவர். அந்த அரங்கேற்றமும் ஆசிரியர் பதவியுயர்வும் கலைஞர்கள் மற்றும் ரசிகர்களிடையே நான் நன்கு அறிமுகமாவதற்கு வாய்ப்பாக அமைந்தன.

அவர் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து கலைச்சேவையைத் தொடர எல்லாம் வல்ல இறைவன் துணை நிற்க வேண்டுகின்றேன்.

"நன்றி"




# காலத்தால் அழிக்க முடியாத தமிழிசைப் பணி

இன்னிசை வேந்தர், சங்கீதபூஷணம்
திரு. பொன். சுந்தரலிங்கம்
கனடா

**ஈழத்து கர்னாடக இசைவரலாற்றில் 70 வருட கலைப்பயணத்தை நிறைவு செய்துள்ள இசைப்பேரறிஞர் சங்கீத பூஷணம் சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் அவர்களிடம் நான் கண்டவை.**

சங்கீதபூஷணம் திரு. S. பாலசிங்கம் அவர்கள் அரியாலை திரு. திருமதி. சபாபதிப்பிள்ளை தம்பதியினரின் செல்வப்புதல்வர். இவர் பிரபல கர்நாடக வாய்ப்பாட்டு வித்துவான் மட்டுமல்ல, பிரபல ஹார்மோனிய வித்துவான். இவர் ஈழத்து இசையுலகுக்கு கிடைத்த பெரும் சொத்து. பாலசிங்கம் அவர்கள் தமிழ் இசை, பண்ணிசைக்கு ஆற்றிய பணி காலத்தால் அழிக்க முடியாததொன்று. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீதபூஷணம் பட்டம் பெற்று தாய்நாடு வந்ததும் நான், எனது, என்று எண்ணாது இசையுலகமும் தமிழ்மண்ணும் தமிழிசையும் வளர வேண்டுமென்ற அவாவில் பாலசிங்கம் ஆசிரியர், மறைந்த இசையாசிரியர் நமசிவாயம் போன்றோரின் உயர்முயற்சியால் அண்ணாமலை இசைத்தமிழ்மன்றம் 50 ஆண்டுகளுக்கு முன்னரே நல்லூரில் நிறுவி அன்றிலிருந்து இன்று வரை பேசப்பட்டுவருவது யாவரும் அறிந்ததே. இவர் ஈழத்து முன்னணி இசை மேதைகளில் மிகமுக்கியமானவர். பண்பாளர், இவர் வானொலி , தொலைக்காட்சிகளில் அதிவிஷேட பிரிவில் பாடிவருபவர். இசைக் கலைஞர்கள் முதல் இசைபயிலும் மாணவ மாணவிகள் அனைவரும் இவரைப் பின் பற்றி வாழப்பழக வேண்டும். ஒரு கலைஞன் வாழும் காலத்தில் பாராட்ட வேண்டும். அந்த வகையில் இசைப்பேரறிஞர் பாலசிங்கம் அவர்களது 70வது வருட கலைப்பயணத்தினை பாராட்டி பாராட்டுவிழா நடைபெறுவதை எண்ணி பெருமகிழ்வடைகிறேன். இந்த நற்பணியில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள், கலாரசிகர்கள் மற்றும் அனைவரையும் பாராட்டுகின்றேன்.

எனக்கும் திரு. பாலசிங்கம் அண்ணருக்கும் நெருங்கிய தொடர்புண்டு அவர், கலைத் தொண்டாற்றிய காலங்களில் அவருடன் நானும் வாழ்ந்ததில் பெருமை கொள்கிறேன். எங்கள் இளம் கலைஞர் மன்றத்துடன் நெருங்கிய ஈடுபாடு கொண்டவர். இவரது குடும்பம் ஓர் பெரும் கலைக்குடும்பம். அதே வேளையில் இவரிடம் இசை பயின்றோர் ஈழத்திலும், புலம் பெயர்நாடுகளிலும் இசைத்தொண்டாற்றி வருகின்றனர். இவரது மூன்று புதல்விகளில் மூத்தவர் பிரபல வீணை வித்துவான் கல்யாணி சுதர்சன் கனடாவில் வாய்பாட்டு வீணை வித்துவானாகவும், இரண்டாவது மகள் அமிர்தவர்ஷினி நேர்வேயில் நடன ஆசிரியையாகவும் பணியாற்றுகின்றனர். மூன்றாவது மகள் பாலினி கண்ணதாசன் தாயகத்தில் நடன ஆசிரியையாகவும், மருமகன் கண்ணதாசன் நாடறிந்த பிரபல மிருதங்கவித்துவானுமான விளங்குகின்றார்கள். நிறைந்த கலைச்சேவை செய்ய இவருக்கு வாய்த்த துணைவியார் நாகேஸ்வரியின் தொண்டை பாராட்டாமல் இருக்க முடியாது. விழாநாயகர் தொடர்ந்தும் 100ஆண்டு கலைப்பயண விழாவையும் காணவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.






# நீடுழி வாழ வாழ்த்துகிறேன்

**சங்கீதபூஷணம்**
**திரு. ஐ. வேலாயுதபிள்ளை**
**கனடா**

இசை கலாசார சூழலில் வாழும் சங்கீதபூஷணம் திரு. பாலசிங்கம் அவர்கள் கடந்த 70 வருடங்களாக தமிழிசைக்கு ஆற்றிய தொண்டு மிக மிகப் பெரியது. அவரும், சங்கீத பூஷணம் ஆ. நமசிவாயம் ஆகிய இருவரும் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தைச் செயற்படுத்தி 40 வருடங்களுக்கு மேல் சேவை ஆற்றியது குறிப்பிடத்தக்கது. மேலும் பல நூற்றுக்கணக்கான இசைக் கலைஞர்களை உருவாக்கிய பெருமைக்கு உரியவர் திருவாளர் பாலசிங்கம் அவர்கள். வாய்ப்பாட்டு மட்டுமல்லாது ஹார்மோனியம் வாசிப்பதிலும் சிறந்த வித்துவான் என்பதையும் நான் அறிவேன்.

அவரது 70 வருட இசைப்பயணத்தை பாராட்டி, அவர் ஆரோக்கிய மாக நீடூழி வாழ வேண்டும் என இறைவனை வேண்டுகிறேன்.





# அண்ணனை வாழ்த்துகிறேன்

சங்கீதபூஷணம்
V.K. நடராஜா
அளவெட்டி

அரியாலை ஊர்தந்த இசை ஆசான் சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் அவர்கள் இசைக்கலையை பரமேஸ்வராக் கல்லூரியில் கல்வியோடு பயின்றார். 1958ஆம் ஆண்டு நான் இசைக்கலையைக் கற்பதற்கு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குச் சென்றபோது முன் பின் தொடர்பில்லாத என்னை வரவேற்று நேர்முகப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெறுவதற்கு உதவி செய்தார். அங்கு இசை பயிலும் போது மிகவும் அடக்கமாகவும், பண்பாகவும், பயபக்தியுடன் குருமாரின் நல்ல பெயருடனும் பயின்று சங்கீத பூ ஷணம் பட்டம் பெற்று நாடு திரும்பினார்.

அங்கு படிக்கும் காலத்தில் எனக்கு இசை சொல்லித் தந்ததோடு ஆக்கமும், ஊக்கமும் அளித்து என்னையும் முன்னிலைக்கு கொண்டு வந்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே இசையரசு M. M. தண்டபாணி தேசிகர், D. K. ரங்காச்சாரி, மன்னர்க்குடி இராஜ கோபாலப்பிள்ளை, மயிலம் வச்சிரவேலு முதலியார், திருப்பாம்புரம் சுவாமி நாதப்பிள்ரைள போன்றோரிடம் இசை பயின்றும், தமிழிசைப் பாடல்களை இராகபாவமும், பாவின் பொருளினை உணர்ந்தும் பாடி இசையரங்குகளில் தனக்கென ஒரு பாணியைக் கையாண்டு இசையாளனாக மதிப்புப் பெற்றவர். என்போன்ற இசையாளர்கள் முன்னிலைக்கு வருவதற்கு ஊக்கம் கொடுத்தவர். 1962ஆம் ஆண்டு எனது இசையரங்கேற்றத்திற்கு தம்புரா சுருதி மீட்டி எனது முதல் கச்சேரி சிறப்புற உதவி செய்தவர். கிளிநொச்சிக் கந்தசாமி கோயிலில் எனது கச்சேரி இடம்பெற்ற போது தானே தம்புரா மீட்டி எனக்கு ஊக்கம் கொடுத்தவர்.

இவர் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம் என்னும் மன்றத்தில் வாய்ப் பாட்டிசை, வாத்தியஇசை, பண்ணிசை போன்ற பாடங்களிற்கு சிறப்பு வாய்ந்த ஆசான்களை அமர்த்தி திறம்பட வகுப்புக்ளை நடத்தியதோடு வட இலங்கை சங்கீதசபையால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் மாணவர்களைத் தோற்றுவித்தார். அவருடைய பாராட்டு விழாவிலும், நூல்வெளியீட்டிலும் பங்கு கொள்வதையிட்டு எனது மகிழ்ச்சியைத் தெரிவிப்பதோடு அவரும், அவரது குடும்பமும் சிறந்து வாழ அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையாரை வேண்டி வணங்குகின்றேன்.



# இலங்கையின் மூத்த கர்நாடக இசைக்கலைஞர் பற்றி....

சங்கீத வித்வான்
A.K க. கருணாகரன்

இலங்கையின் கர்நாடக இசைத்துறையில் இந்தியா சென்று பல சிறந்த வித்வான்களிடமும் சிறப்புப் பயிற்சிகள் பெற்று சங்கீதபூஷணம் பட்டமும் பெற்று இசைப்பணியாற்றிய, இன்றிருக்கும் முதுபெரும் கலைஞர்களுள் முதன்மையானவர் பாலசிங்கம் மாஸ்டர் என்பதில் சந்தேகமேயில்லை.

1959ஆம் ஆண்டளவில் அவரது இசை அரங்கேற்றம் யாழ்நகரில் நடைபெற்றது. யாழ் நகரெங்கும் சுவரொட்டி விளம்பரம் மூலம் நல்ல அறிமுகம் பொது மக்களிடம். நானும் 14 வயது இசைமாணவனாக இருந்து, அரங்கேற்றத்தைக் கேட்டு மகிழ்ந்தேன். பின்பு 1965ஆம் ஆண்டளவில் எமது ஊராகிய வதிரி கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியில் நடைபெற்ற விழாவில் இவரது கச்சேரியும் நடைபெற்றது. அதனையும் கேட்டேன். கச்சேரியில் உடன் பாடியவர் பின்னைய நாட்களில் பிரபலமான திரு. L. திலகநாயகம் போல் அவர்கள். அவர் இவரது முதல் மாணவருமாவார்.

1969ஆம் ஆண்டில் நான் இலங்கை வானொலியில் இசைத்துறைத் தயாரிப்பாளராக பணிபுரிந்த போது கர்நாடக இசைக் கச்சேரிகளுக்கு பொறுப்பாளராக இருந்ததால் 3 மாதத்திற்கொருதடவை இவரது A, பிரிவுக் கச்சேரிகளை ஒலிப்பதிவு செய்து ஒலிபரப்புவதால் இவரது கச்சேரி செய்யும் பாணியை பலதடவை கேட்டு மகிழ்ந்தேன். கனதியான, மிருதுவான வல்லின, மெல்லின பிரயோகங்கள் பேசும் சாரீரம், அற்புதமான தமிழ்க் கீர்த்தனைகள், விருத்தங்கள், திருப்புகழ் பாடி கச்சேரியை சிறப்படையச் செய்து விடுவார். தொடர்ந்து வானொலியில் Super Grade எனப்படும் உயர்பிரிவு பெற்று பல வருடங்கள் பாடியவர். முக்கிய ராகங்கள் அனைத்தையும் பாடுபவர். சர்வலகு சுத்தமான கற்பனாஸ்வரப்பிரயோகங்கள் இப்படிப்பல.

இதே போல் யாழ்ப்பாணத்திலும், இலங்கையின் பல பாகங்களிலும் பல இசைமேடைகளிலும் பாடி தனக்கென தனிமுத்திரை பதித்தவர்.

சில இசைக்கலைஞர்கள் பட்டம் பெற்று பெயர் வந்ததும் தாமுண்டு , தன்பாடுண்டு என இருந்துவிடுவர். பாலசிங்கம் மாஸ்டர் அவர்கள் அண்ணாமலை இசைத்தமிழ்மன்றம் எனும் பெயரில் இயங்கிய மன்றத்தில் பல வருடங்கள் இசைவிழாக்களையும், இசைவகுப்புக்களையும் நடாத்தி தமிழ் இசையை வளர்த்த மூலவர் என்பதும் உண்மையே. விழாக்கள் நடாத்தும் போது எந்தவித பதட்டமோ, கோபமோ கொள்ளாது புன்சிரிப்புடன், மெதுவாகப்பேசி அனைவரையும் அரவணைத்துச் செல்லும் பண்புடையவர். தனது லட்சியத்திலிருந்து சிறிதும் வழுவாது தானும் தமிழ்பாடல்களையே பாடி மற்றவர்களையும் தமிழிசையையே பாடவேண்டும் என அன்பு வேண்டுகோள் விடுத்து தமிழிசைமேம்படக்காரணமானவர் என்பதும் மிகையல்ல.

இசைக்கலைஞர்களை, இளம்கலைஞர்களை பாராட்டி மகிழ்வது இந்திய, தென்னிந்தியசபாக்களில் சர்வசாதாரணம். எமது நாட்டில் இது மிகக்குறைவு. காலம் கடந்தாவது, முதுமைநிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் பாலசிங்கம் மாஸ்ரர் அவர்களை பாராட்டி வாழ்த்தும் குழுவினருக்கு எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

அன்னாரது குடும்பமே பாட்டு, வீணை, நடனம், மிருதங்கம் ஆகிய துறைகளில் இசைப்பணியாற்றி வருவதை அனைவரும் அறிந்துள்ளோம். பாலசிங்கம் மாஸ்ரர் அவர்கள் நலமாக மேலும் பல வருடங்கள் வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருளை வேண்டுகின்றோம்.





# பண்புகளைக் கற்றேன் தெளிந்தேன்

சங்கீதபூஷணம்
திரு. ப. முத்துக்குமாரசாமி

அன்பே வடிவங்கொண்டவர், நட்புக்கு இலக்கணமானவர், பண்பாளர், நம் பாலசிங்கம். ஒரு தரம் அவரிடம் பேசிப்பழகியவர்கள் மீண்டும் மீண்டும் அவரை நாடி நட்புக்கொள்ள முயலும் விந்தையை என் கண்ணாரக் கண்டிருக்கிறேன். இன்சொல் அன்றி வேறு சொற்கள் வாயில் வராது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசை பயின்றபோது நானும் பாலசிங்கம் அவர்களும் ஒரே விடுதியில் தங்கும் பேறு கிடைத்தது. அவரிடம் நிறைந்த பல பண்புகளைக்கண்டேன். கற்றேன், தெளிந்தேன். நண்பர் பாலசிங்கத்தின் நட்பினால் நல்ல பல நெறிகளை நான் அவரிடம் கற்றுக் கொண்டேன்.

அவரது கலைஞானம் அளப்பரியது. இனியகுரல், பாட்டின் பொருளுணர்ந்து பாடும் அழகு, தமிழ்மீது அவர்கொண்ட அழகான காதல் சொல்லும் தரமன்று.

*"எண்ணித் துணிக கருமம் துணிந்த பின்*
*எண்ணுவம் என்பது இழுக்கு"*

என்னும் வள்ளுவனின் குறளுக்கு இலக்கணமாய் வாழ்பவர். இசையரங்குகளில் பாடும் பொழுது அவருடைய பாடற்தேர்வு, நுட்பமான ராகத்தேர்வு, வித்தியாசமான ராகங்கள், மக்கள் விரும்பும் பாடல்கள், கருத்து நிறைந்த பாடல்கள் என இவரது இசை நிகழ்ச்சி ஒரு எடுத்து காட்டாக அமையும்.

பண்பொருந்த இசைபாடி, கலை உள்ளங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திய பாலசிங்கம் அவர்கள் கலையுலகில் பாட்டின் திறத்தாலே வெற்றிகொண்டு ஆண்டவன் ஆடல்வல்லான் அருளினால் எல்லா நலமும் பெற்று சுற்றம் சூழ இன்பவாழ்வு வாழப் பிரார்த்திக்கிறேன்.

தேசிகர் வழி நின்று தமிழிசை வளர்த்த அவர் இன்னும் அதனைத் தொடர எல்லாம் வல்ல இறைவன் அருள்வாராக!



# தமிழிசைக்காய் தன்னைத் தந்தவர்

சங்கீதகலாநிதி

திரு. நா. வி. மு. நவரட்ணம்

தலைவர்,

இசைத்துறை யாழ் பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற செயற்பாட்டாளர் களில் ஒருவரான மூத்த இசைப்பேரறிஞர் அரியாலையூர் சங்கீதபூஷணம் பாலசிங்கம் என்ற இசையாளரை தெரியாதவர்கள் இசையுலகில் இல்லை என்றே சொல்லலாம்.

இவர் சிறந்த அபார இசைஞானமும், மிகுந்த பண்பாடும், உயர்ந்த குறிக்கோளும் கொண்டு தனது இசைவாழ்வை வாழ்ந்து காட்டியுள்ளார். அண்ணாலைப் பல்கலைக்கழகத்தில் இசைபயிலும் காலத்தில் புகழ் பூத்த பலஇசைமாமேதைகளை தரிசிக்கும் வாய்ப்பும், அவர்களிடம் இசையை மிகநீண்ட காலம் மாணவராக இருந்து குருகுல முறைப்படி பயிலும் அரிய வாய்ப்பும் பெற்றவர். ஈழத்தில் தமிழிசை இயக்கம் தோற்றுவித்த சங்கீதபூஷணம் திரு. ஆ. நமசிவாயம் அவர்களது வலக்கரமாக நின்று, அண்ணாமலை இசைத்தமிழ்மன்ற செயலாளராக சுமார் 40 ஆண்டுகள் பணிபுரிந்து ஈழத்தில் தமிழிசை பெருக்கெடுத்தோட முன்னின்று உழைத்த பேரறிஞர். பல சிறந்த மாணவர்களை உருவாக்கியவர். தமது ஓய்வின்பின்னர் புகழ் பூத்த இசைநிறுவனமான இராமநாதன் நுன்கலைக்கழகத்தில் இணைந்து ஐந்து ஆண்டுகள் இசைவிரிவுரையாளராகவும், உயர்நிலைப்பரீட்சகராகவும் பணிபுரிந்தவர். இராமநாதன் நுன்கலைக்கழகத்தின் தமிழிசை உணர்வை தனது திறமையால் நிலைநிறுத்தியவர்.

1959ஆம் ஆண்டு எனது சகோதரருடன் இணைந்து மிகச்சிறிய வயதில் நான்பாடிய தமிழ்ப்பாடல்களையும் திருவாசகத்தையும் கேட்டு மேடையில் ஏறி என்னையும் எனது சகோதரரையும் நயினையம்பதியில் பாராட்டி ஆசி வழங்கியதை என்றும் மறக்க முடியாது.

தமிழுக்காகவும், இசைக்காகவும் தம் வாழ்வை அர்ப்பணித்த இம்மேதை இம்மண்ணில் 100அகவை கடந்து வாழ்ந்து இம்மண்ணில் இசைவளத்தை மேம்படுத்திட எல்லாம் வல்ல விக்கினவிநாயகனையும், அன்னை ஸ்ரீநாகஇராஜேஸ்வரி திருப்பாதங்களையும் வழுத்தி, எமது யாழ்ப்பாணம் நுண்கலைக்கழகம் சார்பாக அவரை வாழ்த்தி வணங்கி நிறைவு செய்கிறேன்.





கலாபூஷணம், சங்கீதபூஷணம்

# திரு. சு. கணபதிப்பிள்ளை அவர்களின் உள்ளத்திலிருந்து

ஓய்வுநிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர்,
பொன்னாலை கோவிலடி,
சுழிபுரம்.

*"அறிந்தவன் அறியவேணும் அரியாலை பினாட்டுத்தட்டை" என்பது ஆன்றோர் வாக்கு – யாழ்ப்பாணத்துப்பழமொழி.*

அரியாலை கிராமத்தில் பாரம்பரிய கலைகளைப் பேணி வந்த அறிஞர் பலர் வாழ்ந்து போனார்கள், என்பது நாம் அறிந்தவையே. இந்த வகையில் அரியாலை ஊர் அண்ணாவி சபாபதிப்பிள்ளை என்பவர் அக்காலத்தில் இசை நாடகங்களை மாணவர்களுக்குப் பயிற்றுவித்தும், மேடையேற்றியும் பிரபல்யம் அடைந்தவர் என்பது அவர் தம் புதல்வர்களுள் ஒருவரான சங்கீதபூசணம் திரு. ச. பாலசிங்கம் அவர்கள் மூலம் அறியக்கிடக்கின்றது.

1955 – 1958 வரை 4 வருடங்கள் தென்னிந்தியாவில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீதபூசணம் என்ற பட்டத்தைப் பெற்றவர், இன்றைய விழா நாயகன் திரு. பாலசிங்கம் ஆவார். அக்காலத்தில் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்து அனேக தமிழிசைப்பாடல்களை ஆக்கி அளித்த பெருமைக்குரியவர், இசையரசு, இசைப்பேரறிஞர், இசைப்பேராசிரியர் உயர்திரு. எம். எம். தண்டபாணிதேசிகர் அவர்கள். புகழ் பூத்த இசை மேதைகளான T.K. ரங்காச்சாரி, T.N. சிவசுப்பிரமணியம்பிள்ளை, N.P. வச்சிரவேலு முதலியார், மன்னார்குடி ராஜகோபாலபிள்ளை போன்றோர் விரிவுரையாளர்களாக இருந்ததால் இவர் இப்பெரியார்களிடம் இசையை கற்கும் வாய்ப்பைப் பெற்றார். இவருடன் கற்ற தாராபுரம் சுந்தரராஜன் S. சுப்பிரமணியன் ஆகியோரும் இவருடன் கற்று முதலாம் பிரிவில் சித்தியெய்தியவர்கள். இவர்களுடன் சேர்ந்து கற்றதனாலும் இசைப்பாரம்பரியத்தில் இருந்து இவர் வந்ததினாலும் இசையைக்கற்றதுடன் தமிழிசையை வளர்க்க வேண்டும் என்ற பேராவலும் கொண்டிருந்தார். இலங்கையில் வந்து இசையாசிரியராக பணியாற்றியதுடன், அமரர் சங்கீதபூஷணம் திரு. ஆ.

நமசிவாயம் அவர்கள், தீராத தமிழிசைப் பற்றின் ஆர்வ மேலீட்டால் யாழ்ப்பாணத்து நல்லூரில் உருவாக்கிய அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்துடன் இணைந்து செயலாற்றினார் (1958). இவர்களுக்கு அனுசரனை யாக இருந்து இசைவகுப்பை நடத்த உதவியோர் நான் அறிந்த வகையில் பின்வருவோர் ஆவார், அரியாலை திரு. S. V. பரமசாமி, பிரம்மஸ்ரீ. ப. முத்துக்குமாரசாமி சர்மா, திரு. P. சித்திவிநாயகம் (வயலின்), செல்வி ராதாதேவி சபாபதி, S. பத்மலிங்கம் போன்றோர்.

பலர் இம்மன்றத்தில் இசை பயின்றதுடன் வட இலங்கைச்சங்கீத சபை, இராமநாதன் நுண்கலைக்கழகம் ஆகியவற்றில் கற்றும் பரீட்சைக்கு தோற்றியும் கலாவித்தகர், சங்கீத ரத்தினம் போன்ற பட்டங்களைப் பெற்று இலங்கையிலும் உலகில் பல பாகங்களிலும் பிரகாசித்து வருகின்றனர்.

பல மாணவர்களை தனிப்பட்ட ரீதியில் கற்பித்தும், வ. இ. ச. சபை பரீட்சகராக இருந்தும், யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீட இசைத்துறை வருகை விரிவுரையாளர் ஆகவும், வெளிவாரி பரீட்சகராகவும் பணியாற்றி யமை இவரது இசைச்சேவையை நன்கு புலப்படுத்துகிறது. அன்றியும் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம், ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் விசேட இசைப்பாடகராக இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் ஆகும்.

இவர்களது பிள்ளைகள் தற்பொழுது இசை, நடனக்கலைஞர்கள் ஆவர். குறிப்பாக இவரது மருகர் இசைக்கலைமாணி, கலாவித்தகர் திரு. க. கண்ணதாசன் பிரபலமான மிருதங்க கலைஞராக மிளிர்கின்றார் என்பது பெருமைக்குரியதே.

கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக இவர் இசைக்கு ஆற்றிய பணியை பெருமைப்படுத்தி பெருவிழா எடுக்கும் இச்சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாண கலைப் பாரம்பரியத்தில் நான் பெற்ற அனுபவங்களை இவர் மூலம் எடுத்துக் கூற வாய்ப்புத்தந்த விழாக் குழுவினருக்கு எனது நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்பெரியார் நல்ல கலைக்குடும்பத்தை உருவாக்கிய பெருமைக் குரியவர். மேலும் பலகாலம் உடல், உள, நலத்துடன் வாழ இறைவனை வேண்டி நிறைவு செய்கின்றேன்.



## தண்ணுமை வேந்தன்

# திரு. மா. சிதம்பரநாதன் அவர்களின் உள்ளத்திலிருந்து

டச்சுவீதி, தொல்புரம்.
சுழிபுரம்.

தனது கலைப்பணியின் எழுபதாவது ஆண்டின் பூர்த்தியைக் கொண்டாடும் முதுபெருங்கலைஞர் சங்கீதபூஷணம் ச. பாலசிங்கம் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். இலங்கையின் புகழ்பூத்த இசைக்கலைஞர் வரிசையில் ஒருவராக விளங்கும் அவர் தனது பதின்மூன்றாவது வயதிலேயே ஹார்மோனியக் கலைஞராகக் கலையுலகில் கால்பதித்தவர். அன்றிலிருந்து இன்றுவரை இசையே தன் பேச்சும், மூச்சும் என வாழ்பவர். உயர்பண்பின் உறைவிடமாக விளங்கும் அவர் ஆர்ப்பாட்டமின்றி அமைதியாக இசைப்பணி புரிபவர்.

தமிழகத்தில் அண்ணாமலை அரசர் தொடக்கி வைத்த தமிழிசை இயக்கத்தை, ஈழத்தில் முன்னெடுத்து வருபவர்களில் அவர் முதன்மையானவர். தமிழிசைக்கு அரணாக விளங்கும் அண்ணாமலை இசைத்தமிழ்மன்றத்தைத் தமிழ் ஆர்வலர்களின் துணையோடு கட்டிவளர்த்த பெருமை அவருக்குரியது. அம்மன்றத்தின் பொதுச்செயலாளராக இருந்து இசைவகுப்புகளையும், தமிழிசைவிழாக்களையும் நடாத்தி தேமதுரத் தமிழோசை பரவ வகை செய்தவர்.

அறுபதுகளின் தொடக்கத்தில் நாங்கள் மிருதங்கம் பயிலும் காலத்தில் எங்கள் மதிப்பார்ந்த குரு. ஏ. எஸ். இராமநாதன் அவர்களின் இல்லத்திற்கு அவர் அடிக்கடி வருவார். அவரைப் பாட வைத்தே பாட்டிற்கு வாசிக்கும் முறையை எமக்குக் சொல்லித் தருவார் எங்கள் ஆசிரியர். அவரின் மதுரக்குரலில் குழைந்துவந்த ரஞ்சனி ராகப் பாடலொன்று இன்றும் எனது நினைவில் இனிக்கிறது. எழுபதாம் ஆண்டளவில் அண்ணாமலை மன்றத்தில் அவர் வழங்கிய மிருதங்க ஆசிரியர் பதவி கலைத்துறையில் நான் நிலையாகக் காலூன்ற வழிசெய்ததை மிகுந்த நன்றியோடு குறிப்பிட விரும்புகிறேன். இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் எம்மோடு விரிவுரையாளராகப் பணிபுரிந்த காலத்திலும் தன்னுடைய சீரிய கற்பித்தலினால் மாணவர்களின் பெருமதிப்பைப் பெற்றவர்.

அவர் நலம் பல பெற்று வாழ எல்லாம்வல்ல தில்லைக்கூத்தனின் திருவடிகளைப் பணிகின்றேன்.



1963இல் இளமைத்தோற்றம்





2004இல் கனிந்ததோற்றம்



# நல்லிசை புகட்டிய நல்லாசான்

இசைக்கலைமணி
செல்வி. கிருஷ்ணவேணி மயில்வாகனம்
ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர்
(அழகியல்)

"எழுத்தறிவித்தன் இறைவனாவான்" என்பது ஆன்றோர் வாக்கு, அதற்கிணங்க எனக்கு இசையெனும் தேனமுதத்தைப் பருகவும், பாடவும் வழிசமைத்துத் தந்தவர் எங்கள் ஆசான் திரு. S. பாலசிங்கம் ஆசிரியர் அவர்கள்.

அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தில் நான் இசை பயிலும் பொழுது ஆறு வருடங்களுக்கு மேலாக ஆசிரியர் அவர்களிடம் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. அன்பாகப் பழகுவதுடன் எத்தனை தடவைகளாயினும் அலுக்காமல் கற்பிக்கும் இவரது பாணி தனிப்பாணி. இசை விழாக்களிலும் மாணவர்களாகிய எம்மை இசைக்கச்சேரிகள் செய்வித்து வளர்த்து வந்துள்ளார்.

ஏராளமான மாணவர்களை இசை வித்துவான்களாகவும் இசை ஆசிரியர்களாகவும் ஆக்குவித்த, எளிமையான தோற்றமுள்ள ஆசிரியர் அவர்கள் என்றும் போற்றப்பட வேண்டியவர். அவரது முதுமைக்காலம் மகிழ்ச்சிகரமாக அமைய எல்லாம் வல்ல இறையருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.



# எனது குருவை வணங்கி வாழ்த்துகிறேன்

திருமதி. மல்லிகா குணபூஷணம் நாகராசா
"சங்கீத வித்துவான்
கலாவித்தகர்,
"திருமுறை பண்ணிசைமணி"

இன்று விழாக்காணும் சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கம் மாஸ்ரரின் நிகழ்வு சிறப்புற அமைய இறையருள் வேண்டுகிறேன். மாஸ்ரர் உருவாக்கிய கலைஞர்கள் ஏராளம். அவர் காட்டிய வழியில் சென்று சங்கீதம் என்ற சமுத்திரத்தில் ஒரு துளியாவது கற்கும் வாய்ப்பைப் பெற்ற மாணவியென்பதில் நான் மிகவும் பெருமையடைகிறேன்.

மேலும் நான் சென்னையிலுள்ள தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் இசை கற்கச் சென்ற சமயத்தில் சங்கீத கலாநிதிகளான K.V. நாராயணஸ்வாமி, B. Rayam ஐயர், T.M. தியாகராஜன், சந்தியா வந்தனம் ஸ்ரீனிவாசன், D.K. கோவிந்தராவ் (பிரத்தியேகமாக பயின்ற) திரு. மகாராஜபுரம் சந்தானம் போன்ற பெரியவர்களிடம் பல உருப்படிகள், புதிய ராகங்களைக் கற்றுக்கொண்ட போது அவர்களுடைய பாணி, பக்குவம், கற்பிக்கும் முறை அனைத்தும் எனக்கு பாலசிங்கம் மாஸ்ரர் கூறிய அதே பாதையை நினைவூட்டியது. அவ்வளவு உயர்வான, இசை, சுருதி, நுட்பம், லயசுத்தம், மாயாமாளவகௌளையில் சுரவரிசைகள், ஜண்டைவரிசைகள், மேல்ஸ்தாயி வரிசைகள் சொல்லிக் கொடுக்கும் மாஸ்ரருடைய முறையே ஒரு பூரண அழகு. அதனை கடைப்பிடித்தால், புகழடையலாம். ஆடம்பரமற்ற சாஸ்திரியம் நிறைந்த இசைக்கலைஞர், பொறுமைமிக்கவர், புகழையோ, பொருளையோ, எதிர்பாராது எந்நேரமும் இசையுடன் வாழ்கின்ற ஆத்மசுத்தியான ஒரு சிறந்த ஆசானை எனது குருவாக அடைந்தது எனது பாக்யம். எல்லோர் மனமும் மகிழ மாணவர்களை பாரபட்சமின்றி பாராட்டு வார். தமிழில் பற்றும் பக்தியும் கொண்டவர். அவரை பாராட்டி விழா எடுப்பது மிகவும் போற்றுதற்குரியது. அவரது கலைக் குடும்பத்தினருக்கும் வாழ்த்துக்கள்.

*Tomtesvingen 46,*
*2013 skjetten,*
*Norway.*
*Tel:- 63841896*
*Mallika@c2i. net*

TAMIL GLOBAL ARTS (TGA)
Excels in promoting Tamil Arts

இசைமேதை அரியாலையூர் 'சங்கீதபூஷணம்'

## திரு எஸ். பாலசிங்கம் அவர்களின்

70 ஆண்டுகள் இசைப்பணியைப் பாராட்டி வணங்கும்

# வணங்கு மடல்




OFFICE BEARERS

Hon. Chairman
[illegible]
(Lawyer)

Hon. Secretary
[illegible]
Lecturer
SOAS University of London

Hon. Treasurer
[illegible]
Founder & Artistic Director


பண்பின் பிறப்பிடமாம் பெருமகனார் பாலசிங்கம்
பயின்றளித்த இசை இன்று ஏழுகண்டம் உலவி வர
பண்ணார்ந்த செந்தமிழால் இசைகூட்டி எனக்களித்த
பாவாணர் பாலசிங்கம் பல்லாண்டு வாழ்ந்திடவே
பரமனைப் போற்றி இறைஞ்சி வணங்குகிறேன்.

பாவலர் நற் பரம்பரையில் பிறந்த பண் தமிழர் இவர்
பாலிலும் வெண் இதயமுள்ள பண் இசைப் பாவேந்தர்
அண்ணாவியார் சபாபதிப் பிள்ளையின் வழித்தோன்றல்
அன்னைபோல் பரிவுகாட்டும் ஆர்வமிகு இசை ஆசான்.

அவர்போட்ட அத்திவாரம் என் இசையின் அடிநாதம்
ஏன் வரவில்லை? அந்தப் பக்கம் காணவில்லை என்று
அரவணைக்கும் இசை ஆசான் இவர்போல் எவர் உளரோ?

வெள்ளை வேட்டி சட்டை அணியும் எம் இசை ஆசிரியர்
வெண் தாமரைக் கலைமகள் மயங்கும் இசைவாணர்
தம்புரா மீட்டியும் தாளம் காட்டியும் கவினுறு தமிழிசையை
இன் குரலில் தேனாக இசை ஊட்டும் அண்ணல் இவர்

அண்ணாமலை அரசர் பெயர் போற்ற நன்றிதனை
அடைத்தார் இசைத்தமிழ் மன்றம் வளர்த்தார் நல்லையிலே
என்றும் இன்சொல் இவர் உடைமை - நாவில்
தயவும் தாட்சண்யமும் இன்ப நய நாதம்
இசையும் இசைவித்தலும் இவர் தலையாய கடமை
இதனால்தான் என்போன்றோர் வணங்கிடும் வழமை

எனைத் தன் பிள்ளைபோல் பாசமுடன் இசை ஊட்டி
ஏழிசை சுரங்கள் இன்பமுடன் பாடவைத்து
கீதமும் இசையும் தாளமும் நயம் மேவும்
நாத இசை மேம்பட நல்வழி காட்டிய

ஆசான் பாலசிங்கம் அகவை நூறு வாழியவே
அன்புடன் நன்றிகள் நன்றிகள் என்று
நாம் இவரை வணங்க நல்வழி ஈந்த
ஆடல் கூத்தனின் அடிமலர் இறைஞ்சுவோம்

இங்ஙனம்,
மா. யோகேஸ்வரன்
இலண்டன்
02 செப்ரெம்பர் 2011



# பிரதி உபகாரம் எதிர்பார்க்காமல் அள்ளி வழங்கும் எனது குருவிற்கு

**என்றும் அன்பு மறவாத மாணவன்**
**திரு. யோகராசா யாதவன்**
**(லண்டன்)**

அன்பும், பண்பும் நிறைந்த திரு. பாலசிங்கம் மாஸ்டர் அவர்களுக்கு அன்பார்ந்த வணக்கங்கள். உங்கள் 70 வருட கலைப்பயணத்தை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் 07 வயதாக இருந்த போது என்னை யாரிடம் கர்நாடக சங்கீதம் பயில அனுப்புவது என கேள்வி எழுந்தபோது எனது உறவினர் அனைவரும் ஏக மனதாக பாலசிங்கம் மாஸ்ரரிடமே சேர்க்குமாறு உறுதியாக கூறினர். அன்றிலிருந்து நான் எனது ஆசிரியராக மட்டுமல்ல குருவாகவே இன்றும், இனிமேலும் கொண்டு உள்ளேன்.

மாஸ்ரரது குரல் வளத்தை நான் எப்பொழுதும் ரஸித்தது மட்டு மல்லாது கற்பிப்பது என்பது முற்றுமுழுதாக வேறுபட்ட ஒரு விடயம் என்பதை நான் மாஸ்ரர் மூலமே அறிந்தேன். கச்சேரி செய்வதிலும் கற்பிப்பதிலும் நிகர் நீங்களே.

பலபல ராகங்களில் பல சிறிய பெரிய உருப்படிகளை கற்பித்து எனக்கு பல ராகங்களை பாடல் மூலம் அறிமுகப்படுத்தியவர். இன்று கூட எனக்கு ஒரு கீர்த்தனையின் ராகம் தெரியாவிட்டால் மாஸ்ரரது பாடலை வைத்தே அதை கண்டறிவதற்கு அந்த பாடல்கள் மனதில் அழியாமல் பதிந்துள்ளது.

நான் சிறுவயதில் பாடுவதற்கு பல மேடைகளை அமைத்துத் தந்தது மட்டுமல்லாது இன்று நான் சங்கீதத்தில் முழுநேரமாக ஈடுபடுவதற்கு வித்திட்ட வழிகாட்டியும் எனது குருவே.

எனக்கு மறக்க முடியாத விடயம் ஒன்று உண்டு. ஒருமுறை மாஸ்ரர் வழமை போல் கீர்த்தனை சொல்லித்தந்து விட்டு அதை எழுதியும் கொடுத்து விட்டு பின்னர் ராக ஆலாபனை பாட கற்பித்தார்கள். வகுப்பின் இறுதியில், ராக ஆலாபனையையும் எழுதித்தருமாறு நான் கேட்டேன். அதற்கு மாஸ்ரர் சிரித்து

விட்டு கீர்த்தனையுடைய மெட்டை மனதில் வைத்து ராகத்தைப் பாடச் சொன்னார்கள். நான் இப்பொழுது நினைக்கும் போது கூட எவ்வளவு முட்டாள் தனமான கேள்வி அதுவென்று எண்ணுவது மட்டுமல்லாமல் எந்த ராகமாக இருந்தாலும் இப்பொழுது எனக்கு பாட அந்த நுட்பம் உதவுகிறது. அவரது இலகுவான கற்பித்தல் முறையை கண்டு வியக்கிறேன்.

என்னுடன் எனது சகோதரிகள் யாமினி, நந்தினி, ரதினி கூட இப்போது சேர்ந்து பேசும் போது மாஸ்டர் சொல்லித்தந்த பாடல்கள் இன்றும் ஞாபகமாக உள்ளதை எண்ணி வியப்போம்.

மாஸ்டர் என்னை உருவாக்கியதற்கு என்றும் நன்றிக்கடமை பட்டவனாக நான் இருப்பதோடு அவரது உடல் ஆரோக்கியத்திற்காகவும் நீண்ட ஆயுளுக்காகவும் பஞ்சபூதபரம்பொருளை வேண்டுகின்றேன்.

உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் அன்பான வணக்கங்கள்.



**இளமைக்கால கச்சேரித்தோற்றம்**



# நான்கண்ட மனித தெய்வம்...
# "சங்கீதபூஷணம்" பாலசிங்கம் அவர்கள்

மாணவன், கலாபூஷணம்
திரு. S. நாகராஜா
நாவற்குழி.

1961ஆம் ஆண்டு ஆனி 02ஆம் நாள். ஆம்! நான் தனியாக இசைபயிலத் தொடங்கினேன். அன்று முதல் இன்று வரை அவரின் மாணவனாகவே இருக்கிறேன். பரீட்சைக்கு இசைபயின்றது சொற்பகாலம். ஆனால் பல ஆண்டுகள் இசை பயின்று அவருடன் இணைந்து கச்சேரிகள் செய்தது ஏராளம். அதன் பலனாக தனியாக தனக்கு வந்த கச்சேரிகளையும் என்னைப் பாட வைத்து உ யர்வடையச் செய்தார். அத்துடன் தான் நிர்வகிக்கும் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தில் ஆசிரியராக்கினார். அதன் பலனாக 1971இல் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் "பண்ணிசை , வாய்ப்பாட்டு" கலைஞர் தெரிவில் சித்தி பெற்று இன்று வரை அப்பணியைச் சிறப்புடன் செய்து வருகின்றேன். மேலும் திருமறைக்கலாமன்றத்தில் சுமார் 20 ஆண்டுகட்கு முன் நான் இசை ஆசிரியராகப் பணிபுரிந்த போது இலங்கையின் மூத்த கலைஞரை கௌரவிக்கும் நிகழ்வில் எனது குருவுக்கு தி. ம. க. மன்ற இயக்குனர் அருட். திரு. மரிய சேவியர் அடிகளார் மதிப்பளித்ததையிட்டு பெருமையடைந்தேன்.

நான் கொழும்பில் 15 ஆண்டுகள் பல சைவ ஆலயங்களில் இசைப்பணி செய்வதற்கும், "கலாபூஷணப்" பட்டம் பெறுமளவிற்கு என்னை வாழ வைத்த தெய்வத்தை என் உயிருள்ள வரை மறவேன். மேலும் நான் அவரிடம் தனியாக இசை பயின்றதை விட நல்ல பண்பு, ஒழுக்கங்களை அதிகமாகக் கற்றுள்ளேன். தூய உடையணிவது போல் அவரது உள்ளமும் தூய்மையானதே. என்வாழ்வின் உயர்வுக்கு அவரே சிறந்த மூலகாரணம். அவரிடமே இசைபயின்று உயர்வடைந்ததையிட்டு நான் பெருமைப் படுகின்றேன். நான் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக பழகியமை எழுத்தில் வடிக்க இயலாது. எனவே அவர் நீண்ட ஆயுள் பெற்று இன்னும் பல காலம் வாழ இறைவன் வரம் அளிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

*"நன்றி"*



## எழுபது வருட இசைப் பயணத்தில் எனது ஆசிரியர் "சங்கீதபூஷணம்" பாலசிங்கம் அவர்கள்

**இசைக்கலைமணி.**
**திருமதி. கலாராணி சிறீஸ்கந்தராஜா**
**(ஆசிரிய ஆலோசகர், கொழும்பு)**

ஏழு ஸ்வரங்கள் கோர்த்த இசையின் பயணமதில்
எழுபது ஆண்டுகளாய்ப் பயணித்தவரே
வாழும் காலத்தில் விண்புகழ் பெற்று
வாழ்க்கையின் இன்பத்தை எட்டியவரே
நாளும் என் வணக்கமது உங்களைச் சேர்ந்திட
என் நா இசைப்பதற்கு ஆசானாய் விளங்கியவரே
யாழ் நல்லூர் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றமதில்
பல ஆசான்கள் துணை கொண்டு இசைத் தொண்டை வளர்த்தவரே.

உலகெங்கும் பரந்து இசை பரப்பும் அந்த மாணவர்களில்
உளம் கனிகின்றேன் நானும் ஒருத்தியாய்
அள்ள அள்ளக் குறையாத சங்கீதமதை
மனதில் பதியும் வண்ணம் பொறுமையுடன் அளித்தீர்கள்
வெள்ளை உள்ளம் கொண்டவர் என்பதனை
வர்ணிக்கும் உங்களது வெண்ணிற ஆடை
அன்பால் பல மாணாக்கரைக் கவர்ந்தவரே
உங்களை வாழ்த்த வார்த்தைகள் போதாது.

இலங்கையின் புகழ் பூத்த இசைக்கலைஞரே
உங்கள் இராக ஆலாபனைக்கு ஈடுஇணை ஏது
பண்பில் சிகரத்தைத் தொட்டவரே பெரும்
புகழ் பூத்த கலைஞராய் இம் மண்ணிலே
உள்ளம் உருக உவகையுடன் வாழ்த்துகின்றேன்
ஓங்குக உங்கள் புகழ் தரணியில் என்றும்
இசை ஆசிரியர் பரமசாமியின் மகளாய்
மெச்சுகிறேன் என்றும் தங்களின் தொடர்பிற்கு.

நட்புக்கு இலக்கணமாய் என் தந்தையுடன் இணைந்து

செய்தீர்கள் பல கச்சேரிகள் நாடு முழுவதும் அன்று

பாட்டுக்கு பாவலராய் வலம் வந்தீர்கள்

பாரினிலே அரியாலை சகோதரராய் இருவரும்


நாளும் எம் வீட்டு முற்றமதில் தந்தையுடன் பேசி

மகிழ்ந்து நல் நண்பனாய் இருந்ததை நினைக்கின்றேன் இன்று

சீரற்ற நாட்டு நிலையால் குறைந்தது உங்கள் தொடர்பு

துன்புற்றோம் பல நாட்கள் பிரிந்ததை எண்ணி.

வாழ்க வாழ்க பல்லாண்டு தரணியில்
ஓங்குக ஓங்குக உங்கள் புகழ்
வளர்க வளர்க தங்கள் இசைப்பணி
வாழி வாழி வளமுடன் என்றும்.



**சங்கீதபூஷணம் பட்டம் பெற்றபோது**



# இசையோடு சுதிபோல இசைந்து என்றும் இசைத்தொண்டு செய்த ஆசிரியர் அவர்களே!

கலாபூஷணம்
திருமதி. நவமணி பத்மநாதன்

பொன்மனப் பூமான் பாலசிங்கம் எனும் "புகழுடையோன்" பொன் மனப்பூ மாது நாகேஸ்வரியை நன்னவஞ்சேர் மாமனத்திற் சேர்ந்த மணநாள் போல் என்றென்றும் பூமணம் போல் வாழி பொலிந்து.

வானுயர்ந்த வரத்தால் வாழ்வுயர்ந்த குருவே வையக வாழ்வில் வளமது வாய்த்திட தானுயர்ந்த தவவாழ்வு இசைவாழ்வு தரணியில் பொன், பொருள், புத்திரர் புகளோடு பூத்திட தேனுதிர்ந்த ஈழ மண்ணில் 70 ஆண்டு தேடிய இசைச் செல்வத்தை தேக்கிய களிப்புடனே வானுயர் தானிருந்து வானவர்கள் வாழ்த்திசைக்க பாராட்டு விழாக்காணும் பாலசிங்கமாஸ்டர் அவர்களே வாழிய! வாழியவே!

மாஸ்டர் என்று தான் அன்றிலிருந்து இன்று வரை கூப்பிட்டு பழகியதால் மாஸ்டரை மாற்றவில்லை (மன்னிக்கவும்).

நான் பாவாடை சட்டை அணியும் 14 வயதுப் பருவத்தில் மாஸ்டரின் மாணவியாக படித்தேன். இன்னும் நினைவில் இருக்கிறது. 16 வயதில் நல்லூர் சிவன் கோவிலில் நடைபெற்ற இசைவிழாவில் முதன்முதலில் பைரவி இராகம் பாடி "பழம் நீ பழநீ" என்ற பாடலை பாடி மாஸ்டரின் ஆசியுடன் முதல் கச்சேரியை செய்தேன். இன்று கலாவித்தகர், கலாபூஷணம் ஆகிய விருதுகளுக்கு அவரது ஆசிகள் தான் காரணம். அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டால் ஒவ்வொரு முறையும் நன்றாக சாதனை செய்து Programme கொடுக்க வேணும் என்று கூறுவார். அவர் ஒரு நல்ல அன்பும், பண்பும், நல்லடக்கமும், ஒழுக்கமும் நிறைந்த நல்லாசிரியர் மாத்திரமல்ல மாணவர்களுக்கு பொறுமையுடனும், முழுவிருப்பத்தோடும் ஆறுதலாக

ஒவ்வொரு பாடங்களையும் ஒழுங்காகக் கற்பிப்பார். அவர் கற்பித்த பாடங்கள் படிப்படியாக புத்தகம் பார்க்காமலே தானாக மனதில் வரும். 10 – 12 சங்கதி நிரம்பிய கிருதிகூட மனதில் பதிந்து ஒழுங்காக பாடமுடியும். அவர் ஒரு சிறந்த ஆசிரியர் என்பது என் மனதில் வேரூன்றி இருக்கிறது.

82 வது அகவையில் நடைபெறும் பாராட்டுவிழா சிறக்கவும், உடல் உளவளத்துடன், பூரணசுகத்துடன் மகிழ்ச்சியுடன் வாழவும் நல்லூர் முருகனை பிரார்த்திக்கின்றேன்.

பிள்ளைகள் பெற்றோரில் தங்கி வாழ்கின்றனர். வளர்ந்த பின்னர் பெற்றோரைத் தாங்கி வாழ வேண்டிய கடமை உண்டு. மனித வாழ்வில் குழந்தைப் பருவமும், முதுமைப்பருவமும், பிறரின் அன்பையும், ஆதரவையும், பற்றையும், பாசத்தையும் வேண்டி நிற்பன. பெற்றோர் பிள்ளைகளுக்கு உதவுதலும் பிள்ளைகள் முதுமை அடைந்த பெற்றோரைப் பேணுதலும் தலையாய அறம் ஆகும்.

"தாய் தந்தை பேண்" "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" "தாயிற் சிறந்த கோயிலுமில்லை தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"

பேரன்பு மிக்க ஆசிரியர் குடும்பத்தவர்களே, உங்கள் விழா சிறக்கவும் கடவுள் ஆசிகள் கிட்டவும் எங்கள் குடும்பத்தவரின் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

*மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்*
*வைகலும்.......*





# அரியாலையின் முத்து முல்லை வந்தது

இசைக்கலைமணி,
திருமதி. சாந்தகுமாரி கமலகாந்தன்.

உலகில் பிறந்தவன் எல்லோரும் மனிதனாகிவிட முடியாது. மனிதனாகப் பிறந்தவன் எல்லோரும் கலைஞனாக முடியாது. கலைஞனானவன் எல்லோரும் நல்ல மனிதனாக இருப்பதில்லை. நான் கண்டேன் நல்ல மனிதனை, நல்ல கலைஞனை, நல்ல ஆத்மாவை, அதுதான் அரியாலை தந்த முத்து சங்கீத பூஷணம் திரு. ச. பாலசிங்கம் அவர்கள்.

1984ஆம் ஆண்டு "அண்ணாமலை இசைத்தமிழ்மன்றம்" நல்லூர் பின்வீதியில் உள்ள "மங்கயற்கரசி" பாடசாலையில் இயங்கி வந்தது. நான் முல்லைத்தீவில் இருந்து க. பொ. த (உ/த) பரீட்சை எடுத்துவிட்டு எனது பிறந்த இடமான கல்வியங்காட்டிற்கு சென்றேன். அங்கு எனது பெரிய தந்தையாரின் மகள் சற்குணராணி என்பவர் எனது குரலை கேட்டுவிட்டு அண்ணாமலைத் தமிழ் மன்றத்தில் என்னை சங்கீதபாடம் கற்பதற்காக சேர்த்துவிட்டார். சனி, ஞாயிறு ஆகிய இரண்டு தினங்கள் மட்டுமே இங்கு வகுப்புகள் நடைபெறும் அதன் செயலாளராக இருந்து என்னை வரவேற்றவர் திரு. ச. பாலசிங்கம் ஆசிரியர் அவர்கள். மாணவன் ஒருவன் பாடத்தை நன்கு கற்கவேண்டுமாயின் பாடத்தை கற்பிக்கும் ஆசிரியரை மாணவனுக்கு பிடிக்கவேண்டும். எனக்கும் அதேபோல் திரு. ச. பாலசிங்கம் ஆசிரியர் அவர்களின் கனிவான பார்வையும், வெள்ளைஉடையும், அவருடைய கனிவான பேச்சும் என்மனதை கவர்ந்தது. மன்றத்தில் பல நல்ல கனிவான ஆசிரியர்களிடம் இசையை கற்கும் பாக்கியம் கிடைத்தது. மன்றம் தனது சேவையை திறம்படச்செய்தமைக்கு காரணம் திரு. ச. பாலசிங்கம் அவர்களின் அயராத உழைப்பு என்றே கூற வேண்டும்.

இவ்வாறாக மன்றத்தில் இசையைக் கற்ற எனக்கு 1986ஆம் ஆண்டு இராமநாதன் நுண்கலைக்கல்லூரியில் இசையை கற்க இடம் கிடைத்தது. அங்கும் எங்களுடைய இறுதியாண்டுக்கல்வியின் போது திரு. ச. பாலசிங்கம் ஆசிரியர் அவர்கள் பகுதி நேர விரிவுரையாளராக வந்து சங்கீத பாடத்தை கற்பித்தார். திரு. ச. பாலசிங்கம் ஆசிரியர் அவர்களின் கற்பித்தல் முறை மிகவும்

சுவாரசியமானது. இவர் இந்தியாவில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே கல்வி கற்கும் போது தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை எமக்கு படிப்பினை ஊட்டுவதற்காக அடிக்கடி கூறுவார். நாங்களும் மிக ஆர்வமாகக் கேட்போம். தனது குடும்பத்தில் உள்ளவர்கள் எவ்வாறு கஸ்ரப்பட்டு தன்னை வளர்த்தார்கள், எவ்வளவு கஸ்டப்பட்டு இசைக்கலையை தான் கற்றேன் என்பது பற்றியெல்லாம் எமக்குக்கூறுவார். இந்திய வானொலியும், ஆர்மோனியமும் தன்வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய விதத்தைக்கூறுவார். இலங்கை வானொலியின் 1ஆம் தரம் கலைஞராகவும் இருந்து பலஇசை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்.

இவருடைய சகோதரி செல்வி இராதா அவர்களும் ஒரு சிறந்த இசைமேதையே. இவரிடமும் இசையை கற்கும் பேறு எனக்கு கிடைத்தது. 1990ஆம் ஆண்டுடன் எனது கல்வி யாழில் நிறைவடைய எனது இடமான முல்லைத்தீவிற்கு வந்தேன்.

ஒரு கெட்டதிலும் ஒரு நல்லது நடக்கும் என்று கூறுவார்கள். அதே போல் 1995ஆம் ஆண்டு ஏற்பட்ட யாழ் இடப்பெயர்வு முல்லைக்கு ஒரு நல்ல பொக்கிசத்தை தந்தது. அதுதான் அரியாலையின் முத்து சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கம் அவர்கள். இவர் ஆரம்பத்தில் மல்லாவியில் தனது கடமையை தொடங்கி பின் முல்லை வலயத்திற்கு வந்தார். இவருடையதும். இவர் உறவினர்களதும், கலைஞர்களதும் பெரும் உழைப்பால் தோன்றியது தான் முள்ளியவளை நுண்கலைக்கல்லூரி. இங்கு முதல்தர ஆசிரியராகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர் திரு. ச. பாலசிங்கம் அவர்கள். ஆசிரியரிடம் இசையைக் கற்ற எனக்கு அவருடன் சேர்ந்து இசையை கற்பிக்கும் சந்தர்ப்பமும் கிடைத்தது. நான் நுண்கலைக்கல்லூரியில் கற்பிக்கும் காலங்களில் ஆசிரியரிடம் இசையை கற்றுக்கொண்டே இருந்தேன். "பாலன்" என்ற முத்திரையை பயன்படுத்தி ஆசிரியர் செய்த பல உருப்படிகளை எனக்கு சொல்லித்தந்துள்ளார். இவற்றைவிட ஆசிரியரை அடையாளப்படுத்தும் பாடல்களாக பாசிபடர்ந்த தடாகம், சினம் அடையாதே, இன்பக்கனா ஒன்று கண்டேன், தாமரைப்பூத்த நடாகமடி போன்ற பாடல்கள் மனதை விட்டு அகலாதவை. ஆசிரியர் என்னிடம் சொல்லுவார் "பிள்ளை எங்கட பிள்ளைகள் சோதினை பாஸ் பண்ணத்தான் கல்லூரிக்கு வருகினம். கலையை வளர்க்க வேணும் என்ற எண்ணம் ஒருவருக்கும் இல்லை" என்று கூறிக்கவலைப்படுவார். எனக்குகற்பித்தலில் எந்த சந்தேகம் வந்தாலும் அதனைப் போக்கும் ஒரு அட்சய பாத்திரம் ஆசிரியர் தான். நான் இத்துறையில் இவ்வளவு தூரம் வளர்வதற்கு ஆசிரியர் தான் காரணம். ஆசிரியரது வெண்தலையைப் போல்தான் அவருடைய

உள்ளமும். எந்தவிதமான ஒரு மாசு மறுவும் இல்லாதவர். வேடிக்கையாகவும் நகைச்சுவையாகவும், சிலேடையாகவும் கதைப்பார். கற்பனாஸ்வரம் பாடும் போது தவறாகப்பாடினால் எமது மனம் கோணாமல் "தபமா" என்று வேடிக்கையாக பாடித்திருத்துவார். ஆசிரியரின் வெள்ளை வேட்டி வெள்ளைசேட், கூடைபூட்டப்பட்ட ஒரு துவிச்சக்கரவண்டி எப்பொழுதும் எம்கண்முன் நிற்கிறது. நான் கற்பித்தலில் சற்று கடினத்தன்மை உடையவள். ஆனால் ஆசிரியரைப்போல் கற்பிக்க விருப்பம். ஆனால் முடியாது. ஏனெனில் அவரது கற்பித்தல் தனித்துவமானது, சிறப்பானது. நான் மட்டுமல்ல எனது மகனும் ஆசிரியரிடம் இசையை பயின்றவர். ஆசிரியர் சொல்லிக்கொடுத்த "முருகா" சண்முகப்பிரியா இராகத்தில் அமைந்த வண்ணம் மகன் பாடும் பொழுது ஆசிரியரை நினைக்காத கணமே இல்லை.

ஆசிரியர் முள்ளியவளை நுண்கலைக்கல்லூரியில் இருந்த காலத்தில் கலை ஒரு துரித வளர்ச்சி கண்டது. வட இலங்கை சங்கீதசபைப் பரீட்சை எடுக்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. 1995ஆம் ஆண்டில் இருந்து 2008 ஆண்டு வரை ஆசிரியர் முல்லைக்கு செய்த கலைப்பணி அளவிட முடியாது. வாய்ப்பாட்டு மாத்திரம் இன்றி வாத்தியம், நடனம், யோகா, கராத்தே, சித்திரம் முன்பள்ளி என பல கற்கைநெறிகள் நுண்கலைக்கல்லூரியில் வளர்ச்சி கண்டன. இக்காலகட்டத்தில் படித்த பல மாணவர்கள் இன்று இசைப்பட்டதாரிகளாகவும், நடனப்பட்டதாரிகளாகவும். சித்திரமும் வடிவமைப்பும் பட்டதாரிகளாகவும் படித்துக் கொண்டும் படித்து வெளியேறிக் கொண்டும் இருக்கின்றனர். இவர்கள் யாவரும் ஆசிரியரின் வளர்ப்புகள் என்றே கூறலாம்.

எனக்கு தன்னம்பிக்கையை, துணிவை, தியாகவுணர்வை எல்லாம் தனது நடத்தையால் காட்டித்தந்தவர் ஆசிரியர் தான். தன்னுடைய பல கலையுலக நண்பர்களைப் பற்றியெல்லாம் எனக்கு கூறுவார். தனது மனதை நோகடித்த சம்பவங்களையும் கூறுவார். ஆசிரியர் அதிகம் இறைபக்தி இல்லாதவர். ஆனால் நாஸ்திகன் அல்ல. தனது தொழிலில், சேவையில் இறைவனைக் காண்பவர். "என் உடலும் உயிரும் இசையே" "இசையிருந்தால் மரணம் ஏது" எனும் பாடல் அடிகளின் படி வாழ்ந்து காட்டிக்கொண்டு இருப்பவர். 2009ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது நாம் பட்டதுன்பங்களை சொல்லில் வடிக்க முடியாது. நான் ஆசிரியரை மீண்டும் சந்திப்பேனோ என்று தெரியாமல் இருந்த வேளை ஆண்டவன் எங்கள் பொக்கிசத்தை எமது கையில் தந்து விட்டான். அதற்கு நாங்கள் என்றும் இறைவனுக்கு நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம். 12 வயதில் ஆர்மோனியத்தில் தொடங்கிய பணி 82 ஐக்கடந்து ஒரு சகாப்தமாக வளர எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.



## திருமதி. பவானி ஆலாலசுந்தரம் அவர்களின் உள்ளத்திலிருந்து

இசைக்கலைமணி, இசைக்கலாவித்தகர்,
அதிபர் சதாகான நிலையம்,
கனடா.

70 வருட கலைப்பயண பாராட்டுவிழாக்காணும் ஆசிரியப் பெருந்தகைசங்கீதபூஷணம் திரு. சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

எங்கள் சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கம் அவர்கள் இன்று 70ஆவது கலைப்பயணவிழா காண்பது கேட்டு மிகவும் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். அரியாலையில் மிகவும் பிரபல்யமான கலைக்குடும்பதில் பிறந்த ஆசிரியர் இளம் வயதில் இந்தியா சென்று சங்கீதபூஷணம் பட்டம் பெற்றவர். இவர் அரசாங்கப்பாடசாலைகளிலும் இசை ஆசிரியராகக்கடமை ஆற்றி பல மாணவர்களை உருவாக்கி உள்ளார். தனிப்பட்ட முறையிலும் நல்லூர், அண்ணாமலை இசைக்கலாமன்றத்திலும், அரியாலையில் விஸ்வநாதன் இசைக்கல்லூரியிலும் பல மாணவர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். இவருடைய மாணவர்கள் இலங்கை யிலும், வெளிநாடுகளிலும் பிரசித்தி பெற்ற பாடகர்களாகவும், ஆசிரியர்களா கவும் சிறந்து விளங்குகிறார்கள்.

கனடா மற்றும் மேல்நாடுகளில் பிறந்த பிள்ளைகள் தமிழில் பாடுகிறார்கள் என்றால் அந்தப்பெருமை எல்லாம் ஆசிரியருக்கும் எனது குருவாகிய அவரின் சகோதரி ச. இராதாதேவி அவர்களுக்கும் சாரும் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். மேலும் பல இசைவிழாக் களையும் நடாத்தி மாணவர்களுக்கு ஊக்கமும் கொடுத்து தமிழ் இசையையும் வளர்த்து தமிழ் இசைவளர அயராது உழைத்தவர்.

ஆசிரியர் எனது தந்தை மறைந்த அதிபர் சதாசிவன் (சாண்டோ மாஸ்ரர்) அவர்களின் நெருங்கிய நண்பர். எங்கள் குடும்ப உபயமான இராஜேஸ்வரி அம்பாள் ஆலய சங்காபிஷேக ஊஞ்சல் பாடல்களை ஒவ்வொரு ஆண்டுகளும் பாடுவது என் மனதில் பசுமையான நினைவாக இருக்கிறது. இவருடைய குரல் இனிமையும் இசை ஞானமும் பலராலும் பாராட்டுப்பெற்றது.

இலங்கை வானொலியின் சிரேஸ்ட கலைஞராக கச்சேரிகள் நிகழ்த்தி உள்ளார். இவரது மகள் கல்யாணியும் கனடாவில் சிறந்த வீணை ஆசிரியராக கடமையாற்றி பல மாணவர்களை உருவாக்கி வருகிறார்.

எனது மதிப்புக்கும் அன்புக்கும் உரிய சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கம் ஆசிரியர் அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் நோய்நொடி இன்றி குடும்பத்தோடு சந்தோஷமாக பல ஆண்டுகள் வாழ்ந்து இசைக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்று இறைவனை வேண்டி, மேலும் அவருடைய விழா சிறப்பாக அமையவேண்டும் என்று என் மனதார வாழ்த்துகின்றேன்.



# எனது ஆசான்

திருமதி. செல்வம் நாகராஜா


இறையுணர்விற்கு அடுத்ததாக ஆன்மாக்களுக்கு இதமளித்து இன்பமளிப்பது இன்னிசையாகும். நாதஸ்வரூபமாக விளங்கும் ஆண்டவனை ராக, தாள பொருள் உணர்வோடு அனுபவித்துப் பாடும் பாடல்கள் இறைவனுக்குத் திருப்தியையும், நமக்குப்பேரின்பத்தையும் அள்ளித்தரும். இத்தகைய இசைக்கலையைத் தாமும் அனுபவித்துப் பிறரும் அனுபவிக்க உதவுபவனே உண்மைக்கலைஞன். கலைப்பணி என்பது மிக உன்னதமான ஓர் கடவுட்பணி.

இத்தகைய பெருமை வாய்ந்த இசையை ஸ்ருதி, லயம் பிசகாமல் நிதானமும், தெளிவும் கொண்ட பாடகராக விளங்கும் என் அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய குரு சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கம் அவர்கள் இசைரசிகர்களின் பாராட்டுதல்களுக்கு என்றும் உரியவர். இசைப்புலமை நன்கு கைவரப்பெற்ற இவர் இரசிகர்களுக்கு பிழையற்ற உச்சரிப்புகளுடன் கூடிய தமிழ்மொழிக் கீர்த்தனைகளை தனது மேடை இசைக்கச்சேரிகளின் மூலமும் வானொலிக் கச்சேரிகள் மூலமும் அளித்து வந்தவர். தமிழ் மொழியில் அதீத ஆர்வம் கொண்ட இவர் அதிகமாக தமிழ்கீர்த்தனைகளையே பொருளுணர்ந்து மிக்க இனிமையாகப் பாடுவதில் வல்லவர்.

உண்மையான அற்புதமான இந்தக்கலைஞர் இசையைத் தன் மாணவர்களுக்கு மிக அன்புடனும் பொறுமையுடனும் கற்பிப்பதில் வல்லவர். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தில் மிக்க அர்ப்பணிப்புடன் முதன்மை ஆசானாகத் திகழ்ந்த இவர் அம்மன்றம் மூலம் எத்தனையோ முதற்தர இசைக்கலைஞர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். இராகங்களை மிக நுண்ணிய விளக்கங்களுடன் தெளிவாகவும், எவ்விதப்பிழைகளுமின்றிப் போதிக்கக்கூடிய திறமை பெற்ற ஆசானாக விளங்கும் இவரை எனது குருவாப் பெற்றது எனது தவப்பயனாகும். ஒவ்வொரு மாணவனுக்கும் விஷேட

கவனமெடுத்துக் கற்பிப்பதில் ஆர்வம் காட்டும் உன்னதமான சிறந்த ஆசானான இவர் சக இசைக்கலைஞர்களின் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவர். கர்னாடக இசை உலகுக்குச் சிறந்த பணி ஆற்றி இருக்கின்றார் என்றால் அது மிகையாகாது.

இத்தகைய மிக உயர்ந்த நற்குணங்களையுடைய இசைக் கலைஞனை எனது ஆசானாகப் பெற்றதற்கு நான் ஆண்டவனுக்கு என்றென்றும் நன்றி கூறுகின்றேன். அவர் நல்ல தேக ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுடனும் இருக்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.



நடன அரங்கேற்றமொன்றுக்கு பாடிய போது



# அரியாலை மண்ணில் "பாலு மாஸ்ரர்" பதித்த தடங்கள்

திரு. S.T. பத்மநாதன்
(சமாதானநீதவான்)
169, கண்டிவீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

"பாலுமாஸ்ரர்" என அனைவராலும் அன்பாக அழைக்கப்படும் சங்கீதபூஷணம் சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் அவர்கள் ஓர் இசைத்துறைப் பாரம்பரியத்தைப் பின்னணியாக் கொண்டவர் என்பது நாம் அனைவரும் அறிந்த விடயம்.

எமது அரியாலையூர் கர்நாடக இசைநாடகத்துறைகளின் தேர்ச்சி பெற்ற வித்துவத்தன்மை பெற்ற பலரை உருவாக்கிய ஓர் புண்ணிய ஊர் என்றால் அது மிகையாகது.

அண்ணர் பாலசிங்கம் அவர்கள் "அண்ணாவியார்" என எல்லோ ராலும் அழைக்கப்பெற்ற கர்நாடக இசைத்துறை மேதை அமரர் பெரியதம்பி சபாபதிப்பிள்ளையின் புதல்வராக 1929இல் இம்மண்ணில் காலடி எடுத்து வைத்தார். அண்ணரின் பேரனார் அமரர் பெரியதம்பி அவர்கள் நாடகத்துறை ஆசிரியராக விளங்கியவர் என நாம் அறிவோம்.

இத்தகைய இசைத்துறைப் பாரம்பரியத்தில் பிறந்த அண்ணர் பாலசிங்கம் அவர்கள் தனது இளம் பராயத்திலேயே இசைத்துறையில் ஈடுபாடு கொண்டவராக விளங்கியவர். எட்டு வயதுச் சிறுவனாக இருக்கும் போதே எமது ஊரிலே அருள்பாலித்துக்கொண்டிருக்கும் பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவிலிலே வெள்ளிக்கிழமை தோறும் இடம்பெற்ற சிவநாம பஜனையில் பங்கு பற்றி அனைவரையும் கவர்ந்தவர். அந்நாட்களிலிருந்தே அவர் தனது இசைத்துறைப்பயணத்தை ஆரம்பித்தார் என்று நாம் கொள்ளலாம்.

அரியாலையில் முன்னணி சனசமூக நிலையமாக விளங்கும் அரியாலை சனசமூக நிலையத்தை 1949ஆம் ஆண்டு நிறுவுவதில் எமது ஊர்ப்பெரியார்களுடன் இணைந்து செயற்பட்டவர்.

நாடகப்போட்டிகளில் நடித்தும் பாடியும் ஆர்மோனியம் வாசித்தும் சனசமூக நிலைய வளர்ச்சிக்குத் தேவைப்பட்ட நிதி திரட்டும் நிகழ்வுகளில் பங்கு பற்றி ஒத்துழைத்த பெருமைக்குரியவர் அண்ணர் அவர்கள். அத்துடன் சித்திரைப் புதுவருடப்பிறப்பையொட்டி பாரம்பரியமாக கொண்டாடப்படும் சுதேசிய திருநாள் கொண்டாட்டவிழாக்களில் 1940 – 1950 காலப்பகுதியில் தனது தந்தையாரின் நெறிப்படுத்தலில் மேடையேற்றப்பட்ட நாடகங்களில் நடித்து எல்லோரையும் பெருமைப்பட வைத்தவர் என்பதையும் நான் இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

தனது இசைத்துறையின் நாட்டத்தின் உந்துதலால் 1955 – 1959ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தியா சென்று "சங்கீதபூஷணம்" பட்டம் பெற்று திரும்பியதும் ஊர்மக்களால் யாழ் நகர மண்டபத்தில் இசை அரங்கேற்றம் நடாத்தப்பட்டது. அரங்கேற்றத்துக்கு முன்பாக அரியாலை மகாமாரி அம்மன் கோவிலில் திருமுறைகள் சிலவற்றைப்பாடி இறைஅருளை வேண்டிக் கொண்டது சிறப்பம்சமாகும். அரங்கேற்ற நிகழ்வின்போது எமது ஊரவர்கள் அண்ணருக்கு தம்புரா இசைக்கருவியை வழங்கிக் கௌரவித்தார்கள்.

அரியாலையில் 1974இல் இருந்து பத்து ஆண்டுகள் இயங்கிவந்த விசுவநாதன் இசைக்கல்லூரியில் ஆசிரியராகப்பணியாற்றி தனது இசைத்துறை ஞானத்தை ஊர்மக்களிடையே பரப்பியமையையும் மறந்துவிட முடியாது.

அத்துடன் ஊரில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் (கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம்) பங்குபற்றி தடம் பதித்தவர்.

மேலும் அண்ணர் பாலசிங்கம் அவர்களின் மகள் பாலினி அவர்கள் நடனத்துறையில் கலாவித்தகர் பட்டம் பெற்று பாண்டித்தியம் பெற்றவர். அவரின் நடன அரங்கேற்றம் யாழ் பல்கலைக்கழககைலாசபதி அரங்கில் 28.03.1992 அன்று நடைபெற்ற நிகழ்விற்கு அண்மையில் எம்மை விட்டுப்பிரிந்த பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து, அரங்கேற்ற நிகழ்வின் பரிமாணத்தை உயர்த்திய அந்த உன்னத விழாவிற்கு தலைமை தாங்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அது, நான் என்றும் மறக்க முடியாத சம்பவமாகும்.

இத்தகைய சிறப்புகள் பொருந்திய ச. பாலசிங்கம் அண்ணர் அவர்களுக்கு பாராட்டு விழா எடுப்பதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். அவர் நோய் நொடி இன்றி வாழ எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.



# எங்கள் பாலசிங்கம் மாஸ்ரர்

திரு.ப. ஸ்ரீஸ்கந்தன்
அரியாலை ஒன்றியம்,
கனடா.

எங்கள் மண்ணின் புகழ் பூத்த நாடக ஆசான் அண்ணாவியார் சபாபதிப்பிள்ளை அவர்களின் கலைக்குடும்பத்தில் உதித்த சங்கீதப் பிதாமகன் சங்கீதபூஷணம் பாலசிங்கம் அவர்கள்.

ஏழு தசாப்தங்களாக இசையின் ஏழு ஸ்வரங்களுக்குள் மூழ்கிப் புதுமை சேர்க்கும் இந்தப் பெருமகன் பிறந்த மண்ணில் நாமும் பிறந்தோம் என்பதும், அவர் வாழ்ந்த காலத்தில் நாங்களும் வாழ்ந்தோம் என்பதும் சத்தியமே தவிர வெறும் புகழ்ச்சி அல்ல.

இக்கட்டான சூழ்நிலைகளிலும் மண்ணிலேயே வாழ்ந்து கொண்டு மக்களுக்கு அவர் ஆற்றிய இசைச் சேவையை எவரும் மறந்து விடுவதற்கில்லை. தலை வணங்குகிறோம்.

இங்கும் நிறையவே இசைக் கச்சேரிகள் நடக்கின்றன. எனினும் மாஸ்ரர் நல்லூர்த்தெற்கு வீதியில் நடத்திய கச்சேரிகளை, மண்ணில் குந்தியிருந்து ரசித்த அந்த சுகந்தத்தை இங்கு எம்மால் சுகிக்க முடியவில்லை.

பாகவதர்முடி, வெள்ளை உடை, முகத்தில் தவழும் மென்சிரிப்பு, எப்போதும் பாடலை முணுமுணுக்கும் உதடுகள், நகைச்சுவையான அவரது உரையாடல்கள் எல்லாம் மறக்க முடியாதவை. அவர் இங்கு வந்த போது அவரைக் கௌரவித்ததும், அவரின் இனிய கச்சேரியைக் கேட்டதும் நாம் செய்த பாக்கியம்.

பாலசிங்கம் மாஸ்ரர் மேலும் பல்லாண்டு சுகதேகியாக வாழ்ந்து இசைக்குச் சேவை செய்ய எல்லாம் வல்ல இறைவனை யாசிக்கின்றோம்.

# பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்பட்ட சங்கீத பூஷணம் பாலசிங்கம்



கடந்த வெள்ளியன்று கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியொன்றில் சங்கீத பூஷணம் திரு. பாலசிங்கம் பொற்கிழி வழங்கிக் கௌரவிக் கப்பட்டார். தாயகத்தில் இருந்து வருகை தந்திருக்கும் கலைஞர் பாலசிங்கத்திற்கு லிங்கெயர் நிறுவன அதிபர் திரு. அன்ரனி செல்லராஜா பொற்கிழி வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

# இசைக் கச்சேரியும், பாராட்டு வைபவமும்







தாயகத்தில் இருந்து வருகை தந்துள்ள சங்கீத பூஷணம் பாலசிங்கம் அவர்களின் இசைநிகழ்ச்சியும், பாராட்டு வைபவமும் கடந்த வெள்ளிக்கிழமை கனடா இளம் கலைஞர் மன்றத்தினரால் கனடா கந்தசாமி கோவில் கலையரங்கில் நடைபெற்றது. சங்கீத பூஷணம் பொன் சுந்தரலிங்கம் இசைக் கச்சேரியை தலைமை ஏற்றும், சட்டத்தரணி சிறிமதி பாராட்டு வைபவத்தைத் தலைமை ஏற்றும் நடத்தினர். இசைக் கச்சேரியை கேட்டவர்கள் அனைவரும் மகிழ்ந்தார்கள் என்பதை விட மனதார பாராட்டினார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். முதுமை அவரின் உடலில் தெரிந்தாலும் அவரின் இசையில் குரலில் அவருடைய வயதையும் தாண்டி இளமை தெரிவதாக சிறிபதி சொன்னார். பல கலைஞர்கள், கல்விமான்கள் ஆகியோர் அவரைப் பாராட்டிப் பேசியும், பொன்னாடை போர்த்தியும், அன்பளிப்புக்கள் கொடுத்தும் கௌரவித்தனர்.



# தொடர்ந்திடுக தமிழிசைப்பணி

மிருதங்க வித்துவான்
கலாவித்தகர்
திரு. பரமசாமி கிருபாகரன்
லண்டன்.

சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கம் அவர்கள் இசைக்கலைத் துறையில் 70 வருடங்கள் ஆற்றிய அளப்பரிய தொண்டினை கௌரவிக்கும் முகமாக நடைபெறும் விழாவிற்காக இந்த வாழ்த்துமடலை எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவரது எனது அப்பாவின் பால்ய நண்பர் ஆவார். இவரும் எனது அப்பாவும் "அரியாலைச் சகோதரர்கள்" என்ற பெயரில் கர்நாடக இசைக்கச்சேரிகளை நடாத்தி இசைத்தொண்டு புரிந்தவர்கள்.

திரு. ச. பாலசிங்கம் ஆசிரியர் அவர்கள் இலங்கையில் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம், விசுவநாதன் இசைக்கல்லூரி போன்ற முக்கிய கலைக்கூடங்களில் முக்கிய உறுப்பினராக இருந்து கலைச் சேவையாற்றி பல இசைக்கலைஞர்களை உருவாக்கினார். இன்று அவர்கள் உலகம் முழுவதும் அவருடைய பெயரையும் புகழையும் பரப்பி வருவது பாராட்டத்தக்கது.

அடியேனும் அவருடைய அரவணைப்பிலும் வழிகாட்டலிலும் இசைப்பயணத்தை ஆரம்பித்தேன். எங்களை, 70வதுகளில் அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற ஆண்டுவிழாக்கள், இசைவிழாக்கள் மற்றும் விசுவநாதன் இசைக்கல்லூரி இசைவிழாக்களிலும் பங்குபற்ற வைத்து ஊக்குவித்த பெருமை பாலசிங்கம் ஆசிரியரையே சாரும்.

இதே போல சனசமூக நிலையம் நடத்திய சங்கீதப்போட்டிகளில் எங்களை பங்கு கொள்ள வைத்து தகுந்த பயிற்சிகளும் தந்து பரிசில்கள் பெற வைத்தமையே என்றும் நன்றியுடன் நினைவு கூறவிரும்புகிறேன்.

80பதுகளில் ரூபவாஹினியில் இசையரங்கம் நிகழ்ச்சியில் அவரின் இசைக்கச்சேரிகளுக்கு மிருதங்கத்தை பக்கவாத்தியமாக வாசிக்க வைத்து, என்னை வெளி உலகத்துக்கு அறிமுகப்படுத்தியதுடன், என் தன்னம்பிக்கையை வளர்த்தமைக்கு இன்று மீண்டும் நான் நன்றி கூற விரும்புகின்றேன்.

இவர் பாடும் "பாசிபடர்ந்த தடாகம்" இவர் இயற்றிய "முருகனைத் தினம் நீ நினைமனமே" போன்ற பாடல்கள் என்றும் என் மனதை விட்டு அகலாதவை. இவர் சிறந்த வாய்ப்பாட்டுக்காரர் மட்டும் அல்ல ஹார்மோனியம் வாசிப்பதிலும் வல்லவர்.

இவரின் இசைப்பணிக்கு உற்ற துணையாக இவரின் துணைவியார் திருமதி நாகேஸ்வரியம்மா இருப்பது பாராட்டுக்குரியது.

பாலசிங்கம் ஆசிரியரின் இசைப்பயணம் மேலும் பல்லாண்டுகள் தொடர நல்லை முருகனை வேண்டி பிரார்த்திக்கின்றேன.




**சங்கீதபூஷணம் பாலசிங்கம் அவர்களின் தந்தையார்**
**அண்ணாவியார் திரு. சபாபதிப்பிள்ளை**

சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கம் அவர்களின்
சகோதரி இசைக்கலாவித்தகர் செல்வி. ச. இராதாதேவி அவர்கள்



2003இல் கனடாவில் மூத்தமகள் கல்யாணியின் மாணவியின் வீணை
அரங்கேற்றத்துக்கு சிறப்பு விருந்தினராக உரையாற்றிய போது



சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கம் அவர்கள்
கனடாவில் மதிப்பளிக்கப்பட்ட போது






சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கம் அவர்களின்
இளமைத்தோற்றம்



சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கம் அவர்களின்
திருமணத்தின் போது



சங்கீதபூஷணம் திரு. வி. கே. நடராசா அவர்களின் கச்சேரிக்கு
தம்புரா மீட்டி உற்சாகப்படுத்திய போது



இசைவிழா கச்சேரி ஒன்றின் போது



90 களில் திருமறை கலாமன்றத்தினால் அளிக்கப்பட்ட மதிப்பளிப்பின் போது







திரு. A.S. இராமநாதன்
அமரர், மிருதங்கமேதை அவர்களுடன் 2010ஆம் ஆண்டு
தமிழகத்தில், அவரது இல்லத்தில்



தான் கற்ற அண்ணாமலை பல்கலைக்கழக இசைக்கல்லூரியில்
2010ஆம் ஆண்டு



கனடாவில் (2003) இல் கச்சேரி நிறைவில் கலைஞர்களுடன்



2011 கீதவாணி இசைகல்லூரியில் நவராத்திரி விழாவில்
கௌரவிக்கப்பட்ட போது



# தமிழிசைக்கீர்த்தனைகள்






இயற்றியோர்:-

❖ சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கம்

❖ இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர்



பாடல் :- முருகனைத்தினமும்
இரகம்- திலங்
தாளம்:- ஆதி
இயற்றியர் :- ச. பாலசிங்கம்

## பல்லவி

1 ₄ O O
;, ச்சா ச்சா நி ச்ா பா, மா |; கமாபமா | கா;; சா ||
முரு கனைத் தினமும் நி னை மன மே .. மால்
;, ச ம க மா பா நி மா பா |; ச் க்ா நிச் , | பா, மகமப ||
.. மரு கனைத் தெய்வ யா னை வள் , ளி ம ணா ளன் ...
நிச்க (முரு)

## அநுபல்லவி

;, மகமபா ச்நிச்ா |;, ச்ா க் சா | ச்ா ச்ா ச் நி பா ||
தீ . ரைட் ச . கன் .. திவ்ய சொ ரூ .. பன் . .
;, ச்ா க் க்ா க்ப்மக ச்நி சா|;, நி ச் பா | பா ;மக ||
.. தே வர் து யா... தீர்த்த தீரன் குண சீ . லன் ....
நிச்க் (முரு)

## சரணம்

; க சா கமா பா ; பா பா |; ப ச்ா நி சா | பா , நிபம கா ||
.. கந் . தா . கடம் பா . கதிர் கா ம வே. லா .
;, மா மா க மா , க ம க சா|;, சா கா ம | பா ,நி சா பா ||
.. சிந் தா கு லம் . தீர்த் த குன் றக்கு டிக் கு ம ரா
;, பநிப. காமப பநீநி ச்ா ச்ா |;, ச்ா க்ா ச | ச்ா , நி ச்ா பா ||
.. நொந் தார்க்கருள் புரியும்.. முக்கண்ண னின் மை ந் தா
;, ச்ா க்ா க் ப் ம் க் ச் நி ச்ா |;, நி ச் நி பா | பா; மக ம ப ||
கந் தா சுகந் தா. வென்று .. பா லன் நி த மும் பாட

நிச்க் (முரு)

பாடல்:- உருகாதா உனதுமனம்
இராகம்- தேஷ்
தாளம்:- ஆதி
இயற்றியர் :- ச. பாலசிங்கம்

## பல்லவி

1 ₄ O O

; நிச்ா நிதப மா, கரிகரீ |; நிசாரீ மக | ரீ ; சா; //
. உரு கா . . . தா . . . . . . . . உனது ம . னம் மா.
; ரிமா பா, ரிமபா நிதபா |; நி நீ சா , | நிததபரிமபநி //
தொரு பா . . . . . கன் . . . , அருள்பா . லா . . .என். மேல்
ச்ரீ
. . (உரு)

## அநுபல்லவி

;, நீம பா நீ, நி ச்ா தா |;, ச்ா தா நி | ச்ா; ச் ச் சா //
. . ஆண வத் தால் அழிந்து தா . . . . அல்லது றும் எனக்கும்
பா ; நீ நிநீ பா, பநிச்ரீ |; த நீ த நீ | பா, மரிமபநி //
பே. ரானந்த வாழ் வு . . . . . அளித்திடு வாய் . . நீ . . .
ச்ரி (உரு)

## சரணம்

;, ரீமமா பா ; பா பா |;, பா ப பா | பா; பதபமக//
. . வல்வினை தீர் . த்திடும் . . நல்லை ந கர்க் கும. ரா.
ரீ, பா மகா ரி சாரி நீ சா |;, ரீ ம மா | பா ரிமபச் நிதபா //
. . என்வினை தீ . ரா. யோ . பன்னிரு கை வே . . . லா . .
;, நீ மபா, நீ; ச் நீ |;, சா த நீ | ச்ா; ச்ா சா //
. . உன் புகழ் பா . டிட . . நல் வர மே . தர
;, நீ நி நீ பா; ப நி ச் ரி |;, நீ த மா| ரி ம ப ச் நி த பா //
. . அன் பு ட னே . ம . யில் . . மீ தி னி லே . . . . வா . .
ரீ,ரி மகரி ச ச ரீ ம பாபப| மாபபச் நிதம| பச் நிச்ா , ச்ச் //
தொந்தி வயிறனது தம்பியே நித முந்தியுனைத்தினமும் நம் . பியே . மிக
நீ,ச் ரீ ரிம்க்ரீ க் சா ச் த | ச்ா ரிச்ா நிதப| பதமப ரிமபநி //
தொந்துமே மனம் வருந்தியே சத மென்றுமே யுந்தனை பா லன் நி தமும் பாடி
ச்ரீ
L.. (உரு)

பாடல் :- நீ தா அருள்
இராகம்- சாருகேசி
தாளம்:- மிஸ்ர சாபு
இயற்றியர் :- ச. பாலசிங்கம்

## பல்லவி

நீ , | தா ம ப || ம கா | மா , ரி ||
நீ . தா அருள் ம ஹா மா . ரி
கா , | மா ப த || நீ த | ப ம , ப த ||
கா . மாட்சி அன்னை யே

## அநுபல்லவி

பா த | நீ தா || நி நீ | ச்ா ச்ா ||
பா . ரு ல கோர் . போற்றும்
சா நி | ரீ ச்ா || ச்நி நீத | நீ ச்ா ||
பார் வ தி தே.... . விநின்
ச்ா ரி | க்ா ரீ || ச்ா த | நி ச்ா ||
பா . தார விந்தம் எனக்
ச்நிரிச்ா | தாபத || நிதப | பம பத ||
கா.. தாரம் என்.. நா. ளும்.

## சரணம்

; த | பா பா || ப பா | பா தா ||
. அல் லல் கற் றும் அன் னை
நி தா | பா மா || க சா | ரி க மா ||
அகி லா ண் டேஸ் வ. ரி
; பத | நீ, தப || கா , ரீ | மக கரி சா ||
. சொல் லத். த கு. மோ வந்.. தன்
; ச | கா மா || பா ம | தா பா ||
. தொல் லை வி னை யே தீ ராய்
பா பத | நீ தா || நீ, நீ, | ச்ா ச்ா ||
அரி யா லைப் ப தி மேல் வாழ்
நி ரீ | ச்ா ச்ா || நிசா ; த | நீ ச்ா ||
உமை யே நான் நம்பி வந் தேன்
ச் சா | க்ம்க்,ரி,ச்ா || நிச்ாநீ, | பத நிச் ||
புரி யா.. யோ பாலன் உன் . வம்.
நி ச்ா | நீ பத || நி தா | பம பத ||
உரு கிப் பதம் நி தம் பா . டிட (நீதா)

## இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் இயற்றிய தமிழிசைப்பாடல்கள்

இராகம் : அமிர்தவர்ஷிணி
தாளம் : ஆதி

ஆ. : ச க ம ப நி ச
அ. : ச நி ப ம க ச

(65-ஆவது மேளத்திற் பிறந்தது.)

### பல்லவி

எனை நீ மறவாதே அங்கயற்கண்ணி (எனை)

### அநுபல்லவி

உனை மறந்தோர்க்கெல்லாம் உலகினில் வாழ்வுண்டோ
உன்போல் ஒரு தெய்வம் உலகினில் வேறுண்டோ (எனை)

### சரணம்

நாட்டினிலே மக்கள் வாழ்வு சிறந்திட
நலங்களெல்லாம் தந்து மகிழ்பவளே
பாட்டினிலே இசை கூட்டி எனக்களித்த
பைந்தமிழ்ச் செல்வியே பாண்டியன் மகளே (எனை)

ப. ச்ா ச்ா நீ , , - பா பா ப ம க ம | கா , , , , - சா | கா மா - பா நீ ||
எ னை நீ , . - ம ற வா . . . தே . . . . - அங் க யற் - கண் ணி

ச்ா ச்ா நீ , , - மா பா ப ம க ம | கா , , , , - ப ம | கா மா - பா நீ ||
எ னை நீ , , - ம ற வா . . . தே . . . . - அங் க யற் - கண் ணி

ச்ா ச்ா ச் ச் ச் நி - ப நி ச் நி ப ம க ம | கா , , , , - ப ம | க ம க ச - க ம ப நி ||
எ னை நீ . . . - ம . ற . வா . . . தே . . . . . அங் க . யற் - க ண் ணி .

ச்ா ச் ம் ப் ம் ச் ச் - ச் ச் ச் நி ப ம க ம | கா , , , , - ச் நி | ப ம க ச - க ம ப நி ||
எ னை . நீ . . . . - ம . ற . வா . . . தே . . . . - அங் க . ய ற் - க ண் . ணி

ச்ா ச்ா நீ , , - பா பா ப ம க ம | கா , , ; , - , , | சா , , , - , , , ||
எ னை நீ . . - ம ற வா , . . தே . . . . - . . . . . . - . . .

அ.ப. , , - நிச் , - நி ச்ா - ச் நி பா நீ ச்ா | , , - ச் ச் , - ச் ச்ா | ச் நி நீ ச்ா ச்ா ||
. . - உனை . - ம றந் - தோ . ர்க்கெல்லாம் . . - உ ல . - கி னில் வா . ழ் வுண் டோ

, , - நி ச் , - நி ச்ா - ச் நி ப ம ப நி ச்ா | , , - ச் க் , - ச் ச்ா | ச் நி ப ம ப நி ச்ா ||
. . - உ னை . - ம றந் -தோ. , ர்க்கெல்லாம் . . - உ ல . - கி னில் வா . ழ் வு ண் டோ

, , - நி ச் , - நி ச்ா - ச் நி ப ம ப நி ச்ா | , , - ச் க் , - ச் ச்ா | ச்ா க் ச்ா , ச் க் ச் க்ா , ||
. . - உ னை . - ம றந் -தோ. . ர்க்கெல்லாம் . . - உ ல . - கி னில் வா . ழ் . வு ண்டோ . .

, , - க் ப் ம் - க்ா , - ச் க் ச் நி ப நி ச்ா | , , - நி ச் , - நி பா | ச் நி ப ம க ம ப நி ||
. . - உ ன் . -போல்-ஒ . ரு . தெய்வம் . . - உ ல . - கி னில் வே . . . று ண் டோ .

“ எனை நீ மறவாதே ”

ச. , , - பா , - ப மா பா , , - பா பா | , , - ப , ப - பா | ப ப ம க கா கா ||
. . - நாட் . - டி னி லே . . - மக் கள் . . - வா ழ் வு - சி ற ந் . . தி ட

, , - க ம , - க சா சா , , - சா சா | , , - ச ச , - ப மா | பா , , , , , , ||
. . - ந ல ங் - க ளெல் லாம் . . - தந் து . . - மகிழ் , - ப வ ளே . . . . . .

பாட்டினிலே இசை கூட்டி எனக்களித்த
பைந்தமிழ்ச் செல்வியே பாண்டியன் மகளே (எனை நீ)

இராகம் : கீரவாணி
தாளம் : ஆதி. திச்ரநடை

ஆ. : ச ரி க ம ப த நி ச
அ. : ச நி த ப ம க ரி ச

21—ஆவது மேளகர்த்தா

## பல்லவி

எல்லாம்செய் வல்லவனும் எல்லாம் அறிந்தவனும்
என்னுள்ளந் தனில்அமர்ந்து என்னையாட் கொண்டவனும் (எல்லாம்)

## அநுபல்லவி

நல்லாருறவினிலே நாள்தோறும் வாழ்பவனும்
நாவலர்தம் புலமையிலே நயங்கொண் டிருப்பவனும் (எல்லாம்)

## சரணம்

கதிரவனின் ஒளியினிலே கண்ணிறைந்த வடிவாகி
காரணமு மாகியதன் காரியமுமாகி என்னும்
மதியவனின் நிலவினிலே மாருத குளிராகி
மலரில் மணம்போற்றிகழ்ந்து மன்னுயிரைக் காப்பவனும். (எல்லாம்)

—*—

; - ரி சா ச - ரீ க க ; க ரி ரீ |

. - எல் லாம் செய் - வல் ல வ - ஞ ம் .

; - ரி க ம பா , - ப | மா ம க கா க ரி ரி ச ||

. - எ ல் லா ம் . - அ | றிந் த . வ ஞ ம் . .

சா , நி - ச க ரி ச ச நி ச - ரி க ம ப த ப ா ம க கா , ரீ |

. . . - எ ல் லா ம் . . செய் . வ ல் ல வ . . ஞ ம் . . .

; - ரி க ம பா , - ப | மா ம க கா - க ரி ரி ச ||

. - எ ல் லா ம் . - அ | றிந் த . வ - ஞ ம் . .

சா , நி - ச க ரி ச ச நி ச - ரி க ரி க மா க ம பா ம ப த ப ம க கா ரீ |

. . . - எ ல் லா ம் . . செய் - வ ல் . . . ல . . வ . . . ஞ ம் . .

; - ரி க ம பா , - ப | மா ம க கா க ரி ரி ச ||

. எ ல் லா ம் . - அ றிந் த . வ ஞ ம் . .

சா , நி - ச க ரி ச ச நி ச - ரி க ரி க மா க ம பா ம ப த ப ம க கா ரீ |

. . . - எ ல் லா ம் . . செய் - வ ல் . . . ல . . வ . . . ஞ ம் . .

; - ரி க ம பா , ப | ப த நி ச் நி த ப ம ம த ப ம ||
. . எ ல் லா ம் . அ றி ங் . . த . வ . ஹ ம் . .

க ; ச நி - ரி க மா மா ; - தா பா பா ப த நி ச் ரீ - |
. . . . - எ ன் னுள் ள ம் - த னில் அ மர் ந் து . . -

ச்ா ; - நீ ச் நி த ப | ப த நி ச் நி த - ப ம ம த ப ம ||
. . - எ ன்னை . யா ட் கொ ண் . . ட . - வ . ஹ ம் . .

க ரி ச நி - ச க ரி ச ச நி ச - ரி க ரி க மா க ம பா ம ப த ப ம கா , ரீ |
. . . . - எ ல் லா ம் . . செய் - வ ல் . . . ல . . வ . . . ஹ ம் . .

; - ரி க ம பா , - ப | ப த நி ச் நி த ப ம ம த ப ம ||
. - எ ல் லா ம் . - அ றி ங் , . த . வ . ஹ ம் . .

க ரி சா - ரி க மா மா ; தா பா ப த நி ச் ரீ க் ரி |
. . . - எ ன் னுள் ள ம் த னில் அம ர்ந் து . . . .

ரி ச் ச்ா - நீ ச் நி த ப | ப த நி ச் நி த ப ம ம ப த ப ம க ||
. . . - என் னை . யா ட் கொ ண் . . ட . வ . ஞ ம் . . . .

ரி ச நி ச - "எல்லாம் செய் வல்லவனும்"
. . . . -

அ. ப. ; - ச் ச் நி தா ப - தா ச் நி ச்ா |
. - நல் லா . . ரு - ற வி னி லே

; - ச் நி ச் ரி ரி | ச் ரி க் க் க் ரி ரி ச் ||
. - நா ள் தோ . றும் வா ழ் ப வ ஞ ம் . .

ச்ா ; - ச் நி ரி ச் நி தா ; , ப தா க் ரி ரி ச் ச்ா ச்ா |
. . - ந ல் லா . . . . . ரு ற வி . னி . . லே

; - ச் நி ச் ரி ரி | ச் ரி க்ா ரி க் ம்ா க் ம் க் க் ||
. - நா ள் தோ . றும் வா . ழ் ப . வ ஞ ம் . .

ரி ரி ச் நி - ச் நி ச் ரி ச் நி தா , ப - தா நி ரி க் ரீ ரி ச் ச்ா |
. . . . - நல் லா . . . . . . ரு - ற வி னி . . லே . . .

; - ச் நி ச் ரி ரி | ச் ரி க் க் க் ரி ரீ ||
. - நா ள் தோ . றும் வா ழ் ப வ ஹ ம் .

; - ரி க் ம் க் ரி ச் நி தா ப ப த நி ச் ரீ |
. . நா . வ லர் தம் பு . ல மை யி . னி . லே

ச்ா - நி ச் ச் நி த ப | ப ரி ரீ க் ரி ச் நி த ப ம ப த ப ம க ||
. - ந யங் கொ ண் . டி ரு ப் . . . ப . வ . ஹ ம் . . . .

ரி ச நி ச -
. . . . . - "எல்லாம் செய் வல்லவனும்"

ச. ; - ப ப த ப ப - ப ப ப ப பா |
. - க தி ர வ வின் - ஒ ளி யி னி லே

; - த நி த ப | ம ம மா - ம த ப ம ||
. - கண் ணி றை ந்த வ டி வா கி . . .

க ரி க ம - ப ப த ப பா - ப த நி ரி நி த ப |
. . . . - க தி ர வ னின் - ஒ ளி யி னி . லே .

; - த நி த ப | ம ம மா - ம த ப ம ||
. - கண் ணி றை ந்த வ டி வா - கி . . .

க ரி - ரி க மா ம க கா - ம கா ; ரி - ச நி சா |
. . - கா . ர ண . மு . மா . . கி - ய . தன்

; . - ரி க ம ம ம | ப த நி த பா ||
. . - கா . ரி ய மு மா . கி என் னும்

மதியவனின் நிலவினிலே மாறாத குளிராகி
மலரில் மணம் போற்றிகழ்ந்து மன்னுயிரைக் காப்பவனும் (எல்லாம்)

இவற்றை அநுபல்லவிபோற் பாடுக.

இராகம் : பகுதாரி　　ஆ. : ச க ம ப த நி ச　　28–ஆவது மேளத்திற் பிறந்தது.

தாளம் : ஆதி (1. கலை)　　அ. : ச நி ப ம க ச

### பல்லவி

சினமடையாதே சீறி விழாதே
சிறந்த குணங்களைச் சிதறவிடாதே　　(சினமடையாதே)

### அநுபல்லவி

மனம் போன போக்கினில் போகவிடாதே
மாபெரும் புகழ்வரின் மகிழ்ந்து துள்ளாதே　　(சினமடையாதே)

### சரணம்

அற்பரைப் போய் அடுத்துன் அறிவை விற்காதே
அறிவுடைப் பெரியோரை அவமதிக்காதே
கற்பனை உலகினில் கனவு காணாதே
காலம் கடந்தபின் கண் விழிக்காதே　　(சினமடையாதே)

ப. ; - ச்சா ச்சா - நி பா , மா ; | ; - க மா ப - மா | கா சா - க ம பா ; ; ||
. - சி ன மடை - யா . . தே . . - சீ . றி - வி மூா . - தே . . . .

; - ச்சா ச்சா - ச் நி நி ப ப ம மா | ; - க ம ப த நி ச் நி - பா | ம க சா ; ; - க ம பா ; ; ||
. - சி ன மடை - யா . . . தே . . . - சீ . . . . . றி - வி மூா . . . . - தே . . . .

; - ம ப ம க சா - க ம பா ; - த நி ச்சா | ; - ச் க்ா ச் - ச்சா | நி ச் நி ப - ம ப த நி ||
. - சி . றந் த - கு . ணங் . - க . ளை ச் - சி த ற - வி டா . . . - தே . . .

ச் க் - க்கா ச் சா - ச் நி நி ப ; ப ம மா ; | ; - க ம ப த நி ச் நி - பா | ம க சா ; - க ம பா ; ; ||
. . - சி ன மடை - யா . . . . தே . . . . - சீ . . . . . றி - வி மூா . . . - தே . . . .

அ.ப. ; - ச்சா - நி ப ப - த நி ச்சா ச்சா | ; , - ச் க் க் க்கா | ம் ம் க் க்ப் ம்ா - , க் ச் ||
. - மனம் - போ ன - போ . க் கி னில் . . - போ . க வி டா . . . . . . - . தே .

; - ச்சா - நி ப ம - க ம ப த நி ச்சா ; , - ச்சா | ; , - ச் க் க் க்கா | ம் ம் க் க்ப் ம்ா - , க்ா ||
. - மனம் - போ. ன - போ . . . . க் . . - கிலில் . . - போ க . வி டா . . . . . . - . தே

; - க்ரா ப்ம்ம் - க்ச்ரா ச்நி நி ப - தநிச்ர | ; - ச் க்ரா ச் - ச்ரா | நி ச் நி ப - ம ப த நி ||
. - மா . . . - பெ ரும் பு . க ழ் - வ ரின் . - ம கிழ் ந்து - துள் ளா . . , - தே . . .

ச் க் -
. . - "சினமடையாதே"

ச. ; , - பா ப பா ப ம கா - ம பா பா | பா - ப தா நி - பா | ம ம க க ப மா ; கா ||
. . - அற் ப ரைப் போ . ய் - அ டுத் து உன் - அ றி வை - விற் கா . . . . . . தே

; , - பா ப பா பா , த - ச் நீ , நி பா , பா | பா ப தா நி ச்ா | நி பா நி நி ப மா க ப மா கா ||
. . - அற் ப ரைப் போ . ய் - அ . . டுத் . . து உன் அ றி வை விற் கா . . . . . . . . தே

. ; - க மா ப மா - கா ப மா , க சா சா | ; - ச கா ம பா | ப த நி ச்ா நி பா ||
. - அ றி வு டைப் - பெ ரி . யோ . ரை . - அ வ ம திக் கா . . . . தே . .

கற்பனை உலகினில் கனவு காணாதே
காலங் கடந்தபின் கண் விழிக்காதே (சினமடையாதே)

இராகம் : ஜீவந்திகா    ஆ. : சரிமபதநிச    17-ஆவது மேளத்திற் பிறந்தது.
தாளம் : ஆதி    அ. : சநிதபமரிச

### பல்லவி

பாடி மகிழ்ந்திடுவோம் பண்
பாடுந் திறத்துடனே பாவின் பொருளுணர்ந்து (பாடி)

### அநுபல்லவி

நாடிய இசை நிலை நரம்புகொள் யாழினில்
நயமுறும் இணை கிளை நட்புப் பகையறிந்து (பாடி)

### சரணம்

இசையினுக் கொவ்வாத ஈன நிலையகற்றி
இன்னியங்கள் முழங்க இன்தமிழ்ப் பாவியற்றி
அசைவுடனே இசைத்து அவையினர் போற்றவே
அறிவிற்கறிவான ஐயனையே நினைந்து (பாடி)

ப. பா ; மா - மா ரி ; சா ரி | சா ; ; ; | ; ; - ரி மா ||
பா . டி - ம கிழ்ந் . தி டு வோம் . . . . . . ப ண்

ப தா ப ம ரி - ரி ப ப ம ரி சா ரி | சா ; ; ; | ரி ம ப ம ரி ச ரி ம ||
பா . . டி . - ம . கிழ்ந் . . தி டு வோம் . . . ப ண் . . . . . .

ப த நி ச் நி த பா ம த ப ம ரி ரி | சா ; ; ; | ; ; ; - சா ||
பா . . . டி . ம கிழ் ந் . . தி டு வோம் . . . . . . - பண்

சா ; ரி - மா பா தா நீ ச்ா | ச் நி தா பா - மா | ரி சா ரி மா ||
பா . டுந் - தி றத் து ட னே பா . . வின்-பொ ரு ளு ணர் ந்து

"பாடி"

அ.ப. ச்ா ; நீ தா - நீ ச்ா ச்ா ச்ா | ; - ச் ரி ச் ரி | ரி ரி ச் நி ச்ா ச்ா ||
நா . டி ய - இ சை நி லை . - ந ரம் பு கொள் யா . . . ழி னில்

ச்ா ; ச் நி தா - நீ ச்ா ரி ச் ரி | ; - ச் ரி ம் ரி | ரி ரி ச் நி ச்ா ச்ா ||
நா . டி . ய - இ சை நி , லை . - ந ரம் பு கொள் யா . . . ழி னில்

ச் நி த ப ம ப த நி • ச்ா ச்ா ரி ச் ரீ | ; - ச் ரீ ம் ம்ா | ப் ம் ரீ ச்ா ச்ா ||
நா . . . டி . ய . - இ சை நி . லை . - ந ரம் பு கொள் யா . . ழி னில்

; - நி ச்ா ரி ச்ா - ச் நி தா நி நீ | ; - தா நி த பா | மா , ரி ரீ மா ||
. - ந ய மு - றும் - இ . ணை கி ளை . - நட் பு ப் ப கை . ய றிந் து

" பாடி "

ச. ; - த தா த பா மா ; மா மா | ரி ம ப ம ரீ - ரீ | சா , - ச சா சா ||
. - இ சை யி னுக் கொ வ் வா த ஈ . . . ன - நி லை . - ய கற் றி

; , - சா ரி மா ரி மா - ரி மா மா | ; , - ரீ ம மா | பா , ம பா பா |
. . - இன் னி யங் க ள் - மு ழங் க . - இன் த மிழ்ப் பா . வி யற் றி

அசைவுடனே இசைத்து அவையினர் போற்றவே
அறிவிற்கறிவான ஐயனையே நினைந்து (பாடி)

இராகம் : சுபபந்துவராளி
தாளம் : ஆதி

ஆ. : ச ரி க ம ப த நி ச
அ. : ச நி த ப ம க ரி ச

45-ஆவது மேளக் கர்த்தா

### பல்லவி

இசையின் எல்லையை யார் கண்டார் என்று
இயம்பிடுவாய் மனமே இனிமை தரும் (இசையின்)

### அநுபல்லவி

அசைவும் குழைவும் கொண்டு அமுதமெனப் பொழிந்து
அளவிடற் கியலாத அமைவு பெற்றிலங்கும் நம் (இசையின்)

### சரணம்

காலங் கண்டறியாத இசையினை முதல் முதல்
கருத்தினில் நினைத்தவர் எவர்தானோ அதன்
மூலம் முடிவு என்னும் முறையை அறிந்திட
முயற்சி செய்வோர்க் கெல்லாம் முதன்மையாய்த் திகழும் (இசையின்)

; - நி ச்ா நி தா - ப ம நி த - ப ம த ப ம க |

, - இ சை யி ன் - எ ல் . . - லை . யை . . . .

; - த மா - த நீ | ச்ா ; - ; ; ||

. - யா ர் - க ண் டார் . - . .

; - ச்ா ரீ , க் ரி ச் நி தா , தா நி த மா த ம |

. - இ சை . . யின் . . . எல் . . லை யை .

கா - த மா - த நீ | ச்ா ; - ச்ா ச்ா ||

. - யா ர் - க ண் டா ர் - என் று

; - ச் ரீ க் க் க் - ரி ரி ச் ச் , , - ச் ரி |

; - இ யம் பி டு . - வா . ய் . . - ம ன

ரி ரி ச் ச்ா , - க் ரி | ச் நி த ப ம - க ம ப ||

மே . . . . - . . . . . . - இ னி மை

த நி - ச்ா ரீ ;, க் - ரி ச் நி தா ; ; - தா நி த மா த ம |
த ரும் - இ சை . . - யி ன் . . . . - எல் . . லே யை . ||

கா - த மா - த நீ | ச்ா ; - ; - ; ||
. - யா ர் - க ண் டார் . - . . ||

அ. ப. ; - க மா , த கா - ம - தா , நி மா - த நி ச்ா |
. - அ சை . . வு ங் - கு - ழை . . வும் - கொ ண் டு |

; - ச் ரீ க் - க் க் | ரி ரீ - ச் நீ ரி ச் ச்ா ||
. - அ மு த - மெ . ன ப் - பொ ழிந் து . . ||

கா - க மா , த கா - ம தா , நி மா - த நி ச்ா |
. - அ சை . . வும் - கு ழை . . வும் - கொ ண் டு |

; - ச் ரீ க் - ம் ப் ம்ா | க் ரி ச் நி ; - ரீ ச்ா ச்ா ||
. - அ மு த - மெ . னப் . . . . - பொ ழிந் து ||

. - ச ச க ரி சா - - தா சா நி சா |
. - அ ள . வி டற் - கி ய லா . த

; - த நீ த பா | ம த ப ம கா - ம ப ||
. - அ மை வு பெற் றி . ல ங் கும் - ந ம்

த நி - "இசையின் எல்லையை"
. . -

௪. பா , பா , பா - பா தா , நி த ப பா ; பா ; |
கா . லங் . கண் - ட றி . . யா . . . த .

; - த நீ த பா | ப ம த ப ம - க கா ||
. - இ சை யி னை மு . த ல் . - மு தல்

; - க மா த மா ம கா - ; க கா ரி ரீ ரி சா |
. - க ருத் தி . னி ல் - . நி . னை த் த வர்

; - ச ரீ - க தா | த த ப பா - ப பா ||
. - எ வர் - தா . ஞே . . . - அ தன்

மூலம் முடிவு என்னும் முறையை அறிந்திட
முயற்சி செய்வோர்க் கெல்லாம் முதன்மையாய்த் திகழும் (இசையின்)



இவரது இசைவாழ்வில் தமிழிசை வளர்ச்சிக்கு இவராற்றிய பணி காலத்தால் அழியாதது. நல்லூரில் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தினூடாக வரண் முறையான இசைக்கல்வி, இசைவிழாக்களின் வழி நல்லதொரு இசைப் பண்பாட்டினை வளர்த்த பெருமைக்குரியவர். இவரிடம் பயின்ற நூற்றுக் கணக்கான பிள்ளைகள் இன்று உலகப்பரப்பெலாம் தேமதரத் தமிழிசையைப் பரப்பும் பேறு பெற்றுள்ளனர்.

சூழமைவின் இடர்களிடை உடல் தளர்ந்து போனாலும் உள்ளத்து இசையுயிர்ப்பு சற்றும் குறையாதவராய் அகவை 82இல் எங்கள் மத்தியில் வாழும் மூத்த இசைக் கலைஞர் சங்கீத பூஷணம் பாலசிங்கம் அவர்கள்.



"தேமதுரம்" இறுவெட்டு அறிமுகவுரையிலிருந்து,
பேராசிரியர் என். சண்முகலிங்கன்,
முன்னாள் துணைவேந்தர்,
யாழ். பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.

ஷாம்பவி பதிப்பகம், நீர்வேலி, & யாழ்ப்பாணம். 021 2224143